வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE ROAD, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆனி திங்கள் 9-ம் நாள் (23—6—1963) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 1 | இதழ் 4

தமிழ் பேசும் தொழிலாளருக்கென

# புதிய தொழிற் சங்கம் உதயம்

## குடிசன மதிப்பீடா இனவொழிப்புத் திட்டமா?

### தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

குடிசன மதிப்பீடு நாடெங்கிலும் ஆரம்பமாகியுள்ளது. மதிப்பீட்டின் முடிவு தமிழ் பேசும் மக்களை மீளா அடிமைகளாக்க நடைபெறும் சதியோ என்று ஐயுற வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நாடெங்கும் நடைபெறும் குடிசன மதிப்பீட்டின் முடிவு தமிழ் பேசும் மக்களுக்குப் புதிய முறையில் இன்னல்களைக் கொடுப்பதற்கு எடுக்கப்படும் சதியாகும்.

குடிசன மதிப்பீட்டு விண்ணப்பப் பத்திரங்களில் தாய் மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளில் உள்ள அறிவு பற்றிய ஒரு கேள்வி உள்ளது. இது தமிழ் பேசும் மக்களில் எத்தனை விகிதமானோருக்குச் சிங்கள மொழி அறிவு உண்டு என்பதைக் கணக்கெடுப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் ஒரு சூழ்ச்சி நடவடிக்கையாகும். எனவே தமிழ் பேசும் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். சிங்கள மொழி அறிவு இருந்தாலும் இல்லை என்றே கூற வேண்டும்.

நயமான முறையில் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உள்ள சிங்கள அறிவைக் கணக்கெடுக்கும் முயற்சியே இதுவாகும்.

எனவே தமிழ் பேசும் மக்கள் சிங்கள அறிவு இல்லை என்று கூறுவதுடன் பத்திரங்களையும் தமிழில் நிரப்ப வேண்டும்.

அடுத்து குடிசன் மதிப்பீடு எடுக்க வரும் ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட வகுப்புகளில் சிங்கள மக்கள் அல்லாதார்களிடம் இருபத்தைந்து கேள்விகள் கேட்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இம்முறை நடைபெறும் குடிசன மதிப்பீடு நாட்டின் வளத்தை வளம்படுத்த எடுக்கும் புள்ளி விபரமாகத் தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்ட எடுக்கும் முயற்சியாகவே தெரிகிறது. எனவே தமிழ் பேசும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

## கொழும்புத் துறைமுகத்தில் தோன்றியுள்ள புத்துணர்ச்சி

கொழும்புத் துறைமுகத்தில் கடமையாற்றும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் "துறைமுக நாவாய் இயக்குனர் கழகம்" என்ற தொழிற்சங்கத்தை அமைத்துள்ளனர். திருகோணமலைத் துறைமுகத்திலும் இத்தகைய ஒரு தொழிற் சங்கம் சிறந்த முறையில் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இடதுசாரிக் கட்சிகள் ஆதிக்கத்தின் கீழிருந்த பொதுத் தொழிற் சங்கங்கள் தமிழ் பேசும் தொழிலாளர் கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் கவனிக்காது, தீர்த்துவைக்க முயற்சிக்காது, கண் மூடித்தனமாக இருந்ததன் எதிரொலியாக இப் பொதுத் தொழிற் சங்கங்களினின்றும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் பிரிந்து மொழிவழித் தொழிற் சங்கங்களை அமைத்து வருகின்றனர்.

இடதுசாரிக் கட்சிகளின் தொழிற் சங்கங்களிலும் இதுகாலவரை சேர்ந்திருந்த தமிழ் பேசும் தொழிலாளர்கள், தங்களுக்கான தனியான தொழிற் சங்கங்களை நிறுவ ஆரம்பித்துள்ளனர். அதுவரை அவர்கள் சேர்ந்திருந்த தொழிற்சங்கங்கள் தமிழ் பேசும் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் புறக்கணித்தும், பிரச்சினைகளை உதாசினம் செய்தும் வந்ததே புதிய மொழி வழித் தொழிற் சங்கங்கள் உருவாக வழி வகுத்துள்ளது.

பொதுத் தொழிற் சங்கங்களில் வகுப்பு வாதம் முற்றி தமிழ் பேசும் தொழிலாளர்கள் வதைபட்டு வருவதைத் தொடர்ந்தே பல தமிழ் மொழி வழி தொழிற் சங்கங்கள் உதயமாகி வருகின்றன.

வெவ்வேறு இயக்கங்களின் தலைமையின் கீழ் இயங்கிவந்த அதிகமான தொழிற் சங்கங்களில் 'சோசலிசம்', 'சமதர்மம்' என்ற போர்வைகளின் கீழ் தமிழ் பேசும் தொழிலாளர்கள் துன்புறுத்தப்பட்டு வந்தனர். இன்றோ தமிழ் பேசும் தொழிலாளர்கள் விழித்து விட்டனர். மொழி வழி பிரிந்து தொழிற் சங்கங்கள் அமைக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் கடமையாற்றும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமக்கென துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் என்னும் தொழிற்சங்கத்தை நிறுவினர்.

இக் கழகம் 14-6-63ல் ஒரு தொழிற் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு இலக்கம் 2050 எனத்

(8-ம் பக்கம் பார்க்க)

## சிங்களச் சட்டத்தை நீக்கி புதிய திட்டம் தீட்டவும்

### அ. எ. வி. சங்கத்தின் வேண்டுகோள்

'அரசாங்கத்தின் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், பொருளாதார சிரமைப்புக்கான வழிகளைத் தேடவும், ஏற்ற முறையில், சிங்களம் மட்டும் சட்டத்தை உடனடியாக நீக்கிவிட்டு, புதிய சட்டம் ஒன்றை இயற்றும்படி அரசாங்கத்தை அ. எ. வி. சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.'

அண்மையில் கூடிய அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் எழுதுவினைஞர்கள் தொடர்ந்து நடத்தி வரும் உரிமைப் போருக்கு உறுதுணையாக நின்று வருபவர்களைப் பாராட்டியும், சிங்களத் தேர்வில் கலந்து கொண்டு, ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தவர்களையும் ஒன்று சேர்ந்துழைக்கும்படி கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையிட்டுக் கிஞ்சிற்றும் கவலை கொள்ளாத மார்க்சீயக் கட்சிகளின் மயக்கு மொழியில் மதி மயங்கி ஏமாறாது, மொழி வழி பிரிந்து இயங்குமாறு தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வால் வதைபடும் மக்களுக்கு இயன்ற வகையில் வசதிகள் அளிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் அரசாங்கத்தின் எண்ணத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(8-ம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை

## தமிழரசு வேட்பாளர் திரு. வ நவரத்தினம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாளைய பொதுச்செயலாளராக விருந்தவரும் தமிழரசுக் கட்சியின் முன்னோடிகளில் ஒருவருமான திரு. வ. நவரத்தினத்தையே ஊர்காவற்றுறைத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக நிறுத்துவதென்று கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

சிந்தனை ஆற்றலும் செயல் திறனும் மிக்க விளங்குபவர் திரு. நவரத்தினம் அவர்கள்.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

றோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'றோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# இலக்கியப் பயிற்சி இன்றி இலக்கியம் சமைப்பதா?

## சிருட்டி இலக்கியத்தில் சில பிரச்சினைகள்

—பண்டிதர் பா. பரசுராமமூர்த்தி—

தமிழகத்திலிருந்து வெளி வரும் மாத, வார சஞ்சிகைகளின் கொச்சைத் தமிழ்ப் பிரயோகப் படைப்புக்களைப் படித்து வந்த வாசகர் கூட்டத்தை ஏமாற்றும் உத்திகளில் புதிதாக வெளிப் போந்தது 'பரிசீலனை முறைகள்' என்ற பெயரில் நம் நாட்டுக் கலாச்சாரத்திற்குக் கொள்ளி வைக்கும் முறையிலமைந்த இலக்கியப் படைப்புக்களாகும். இவற்றின் மொத்த வியாபாரிகளாக ஒரு சிலரும், அவற்றைப் பத்திரிகை அலுவலகங்களிற் பிரமாதப்படுத்திப் பிரசுர வசதி செய்து கொடுக்கக் கைதேர்ந்த சில 'ஏஜண்டுகளும்' இருந்து கொண்டு ஈழத்து இலக்கிய உலகை இன்னொரு விதத்திற் கலக்கியடித்து வருகிறார்கள். 'ஆலையில்லாத ஊரில் இருப்பைப்பூ சர்க்கரையாகுமல்லவா?' தமிழிலுஞ்சரி, பிறமொழி இலக்கியங்களிலுஞ்சரி, ஆழமான பரிச்சயமற்ற 'இரண்டுங் கெட்டான் எழுத்தாளர்கள் பட்டியல்' நீண்டிருக்கின்றமையால், பிறமொழி இலக்கியங்களில் சராசரி அறிவு பெற்றுள்ள எந்த எழுத்தாளனும் நமது எழுத்தாளர்களையும், ஏன் பத்திரிகைக் காரர்களையுங் கூடப் 'பம்மாத்துச்' செய்யக் கூடிய திராணியுள்ளவனாகிறான். இதன் காரணமாக ஈழத்து இலக்கிய வட்டாரத்தில் 'ஆபாசக் களஞ்சியங்களான' ஒரு சிலர் தமக்கென்றொரு வாசகர் கூட்டத்தையும், தமக்கென்றேயுள்ள விமர்சகர்களையுங்கூட 'முத்திரை' பதித்து வைத்துக் கொள்ள முடிகின்றதென்றால் வியப்புக்குரியதாக வேறென்ன இருக்கப் போகின்றது? பிறமொழி எழுத்தாளர்கள் கையாளுகின்ற நவீன உத்திகளையும், புதிய பாணிகளையும் தமிழில் கையாண்டு வெற்றியீட்டக் கூடியவர்களைப் பாராட்ட வேண்டியதுதான்! ஆனால் 'ஈயடிச்சான் கொப்பியாக' அந்தந்த உத்திகளையும், பாணிகளையும் மட்டுமன்றி அவரது ஆபாசப் படைப்புக்களையுமே தமிழுக்குக் கொண்டு வருவதை நமது இலக்கியப் பாரம்பரியம் வரவேற்காது. அத்தகைய பிரகிருதிகள் சிலர் ஈழத்தில் தம்மைத் தனிக்காட்டு ராஜாக்களாகக் கற்பனை செய்துகொள்வதும், அவர்களுக்கு 'வக்காலத்து' வாங்குவதொன்றே தமது இலக்கியத் திருத்தொண்டின் 'வளர்ச்சிக் கட்டம்' என்று சிலர் கருதிக்கொள்வதும் அடுக்க முடியாததாகின்றது. இவ்வாறு தனிவழிச் செல்வதாகக் காட்டிக் கொள்பவர்கள் இதுவரைநமது இலக்கிய வரலாற்றில் எவ்வித திருப்பத்தையும் ஏற்படுத்தி விட்டதாகப் பெருமைப்படுதற்கெதுவுமே இல்லை. முற்போக்கு எழுத்தாள நண்பர்களின் 'ஒரிஜினல்' இல்லாக் காய்ச்சலுக்காளாகி வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டவர்கள் இவ்வாறு 'தனி வழி'ச் செல்கிறார்கள் போலும்! ஆனால் சமுதாய, அரசியல், இலக்கிய, யதார்த்த நிலையை உண்மையாக உணர்ந்து மனச் சான்றுக்கு அடங்கித் தமிழ் பண்பின் வழியில் இலக்கியம் படைக்க இவர்கள் முயல்வார்களானால் ஒருவேளை இவர்களது 'தனித்துவம்' வெற்றி பெறக் கூடும்!

சிருஷ்டி இலக்கியக் கர்த்தாக்கள் மத்தியில் நிலவுகின்ற அடிப்படைக் கோளாறுகளை இப்போது அவ்வளவுக்கு விவரிக்க விரும்பாத நிலையில் சிருஷ்டி இலக்கியத்தில் சில பிரச்சினைகளை மட்டும் ஈண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இயல், இசை, நாடகம் எனு முத்திறத்தும் இயலுகின்ற மொழியின் தன்மையிலே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் செய்யுள் துறைக்குள்ள செல்வாக்கு

(13-ம் பக்கம் பார்க்க)




நீரை மறைவல்ல முற்போக்கு எழுத்தாளர்கள் செய்துவரும் 'திருகுதாளங்களை' நான் வாரா வாரம் அம்பலப்படுத்தி வருகிறேன். நான் எழுதும் பச்சை உண்மைகளை மறுக்க முடியாத அவர்கள் இதுவரை மௌனம் சாதித்து வந்தனர். இதன் காரணமாக, இதுவரை தங்களை மதித்து வந்த இரண்டொரு இரசிகர்களும், அவர்களை விட்டுப் பிரிந்துவிட்டபடியால், ஆதரவற்றுத் தவிக்கும் அவர்கள் இப்போது அவலக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசி வார இதழ் ஒன்றில், தேச பக்தனாக மாறிச் சில குறிப்புகளை எழுதுவது சிலரறிந்த இரகசியம்.

முற்போக்கு எழுத்தாளர்கள் உண்மையைத் திரித்து எழுதுவதில் (இதுதான், அவர்கள் சொல்லும் யதார்த்தம்) எவ்வளவு திறமைசாலிகள் என்பதற்கும், நியாயத்தையும் ஒழுங்கையும் புறக்கணித்துவிட்டுக் கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகித்துத் திட்டுவதற்குத் தயங்க மாட்டார்கள் என்பதற்கும் இந்த (ரஷ்ய) தேச பக்தனின் குறிப்புகளை உதாரணமாகக் காட்டலாம்.


கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் நடத்திய கருத்தரங்கம் பற்றிப் பாரபட்சமின்றி எழுதப்பட்ட செய்தி அறிக்கை "சுதந்திரனி"ல் பிரசுரமானது. அன்று நடைபெற்ற குழப்பங்களுக்கெல்லாம் ஆபாசக்கலைஞர் (சிங்கப்பூரார்) தான் காரணமென்பதை, நல்லுள்ளம் படைத்த எல்லோரும் ஒப்புக்கொள்வர். நல்ல முறையில் நடைபெற்ற கூட்டத்தில், ஆபாசக்கலைஞர் (சிங்கப்பூரார்) விஷத்தைக் கக்கிவிட்டார். ஆனால் இந்த உண்மைகளை வேண்டுமென்றே மறைத்துவிட்டு, தலைவர் மீது வசை பாடி எழுதியிருக்கிறார் (ரஷ்ய) தேசபக்தன்! தலைவர் கீழ்த்தரமான பேச்சுக்களைப் பேசினாராம்; 'நாய்க்கு எங்கே அடித்தாலும் காலைத்தான் நொண்டும் என்பது' ஒரு உதாரணமாம்! பாவம்; பரிதாபத்துக்குரிய (ரஷ்ய) தேச பக்தனுக்கு, இது ஒரு பழமொழி என்பது தெரியவில்லை! என்ன செய்வது? ரஷ்யாவில் அப்படி ஒரு பழ

(13-ம் பக்கம் பார்க்க)


கலப்பற்ற உயர்தர அலுமினியம்

மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு

இவற்றிற்கு




டொலர்

அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோப்ரேசன்,

14, டாம் வீதி, கொழும்பு-12.


## கவிதைப் பூங்கா

# தவிக்கின்றேம் நினையிழந்து....!

—"நாவேந்தன்"—

கண்ணுற்றபோதே நின் கரும்பினிய
சொனமலர்த்திக் காதல் பொங்கப்
பண்ணுற்ற செந்தமிழின் பசுந்தோற்
சுவை மலியப் பழகுவார்க்கு
எண்ணற்ற வகையி லெலாம்
இன்பமளித்திடுவா யின்றெம்மைவிட்டு
விண்ணுற்றுய் கந்தைய, வித்தகனே
நின் சீர்த்தி விரிக்கற் பாற் றே!

காவியத்தைத் தருகின்ற கவிஞர்களைப்
புரவலராய்க் காத்து நிற்கும்
பூவியக்கும் தமிழ்மன்ன ரிந்நாளி
லில்லை யெனும் புன்மை போக
நீ;வியக்கும்படி நின்று தமிழ்வளர்த்தாய்
விழாவெடுத்தாய் நினைந்து ஏங்கிப்
பாவியர் யாமென் றுளஞ்சலிக்கப்
படையிலே சென்றனையா? பதைப்பேம்ஐய!

முறைசெய்து ஆளாதார் தீமையெலாம்
கடிதற்குப் பாராளு, மன்றத்துற்று
அறைகூவி, இடித்துரைத்து, அருந்தமிழர்
அடிமைநிலை ஒழிமி னென்றே
பொறைகுன்று தெத்தனையோ கொடுமையெலா
மெதிர்த்தெதிர்த்துப் புறமே கண்ட
இறையவனே; வி. ஏ. கே. எந்தலைவா;
உனக்கும் ஈங்(கு) இறப்புண்டாமோ...?

குறுமுனிவன் போலா வாயுருவத்திற்,
கொள்கையினி லிமயம் போல்வாய்
தறுகண்மை யுறுங்கொடியர் தடியடியும்
கொடுஞ்சிறையும் வதைப்பச் சாம்பி
மறுகிடினும் தமிழன்பும் இனமாண்பும்
நலிதற்குத் தாள மாட்டாய்,
அறுமுகவன் பதநாடி யவனுடனே
தமிழின்பம் ஆர்கின்றயா...?

(வேறு)

திருமுறையின் பொரு ளுணர்ந்து
தெய்வநெறி வழி நின்று
கரும வினை போயகலக்
கடவுளடி துணை யென்னும்
அரு மறையின் கருத்ததனை
அரசியலும் கற்றுணரத்
தருகின் ற பேரறிஞ; தவிக்கின்றேம்
நி னை யிழந்து...!

# கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

இயல் 6

பெருமன்னர் "ஷஹ்ரியர்" தன்ன ரசப்
பேரவையை நாடியே வந்து விட்ட
அருங்கவியை வரவேற்று வாழ்த்துக் கூறி
அன்போடு அருகிருத் துபச ரித்தார்;
பெருமுழைப்பின் பயனுகக் கண்டெ டுத்த
பெருமைநிறை காவியத்தை அவையில் வைத்து
பரிசில்தர மறுத்திட்ட மஹ்மூத் செயலைப்
பாவாணர் பிர்தவ்ஸ் தூற்றி நின்றார்.

மன்னர் மஹ்மூதின் பதியை விட்டு
வந்துள்ளே னுன்நாடு மன்ன! அவன்
தன்னுடை வாக்கினைப் பொய்யா யாக்கி
சத்திய நெறியினில் பிறழ்ந்து விட்டான்
அன்னவன் நாட்டினை நோக்கே னென்று
அடைந்திட்டே னுன்நா டென்றார் கவிஞர்;
உன்னுடை துயருக்குக் கார ணத்தை
உரைத்திடு கவிமன்ன என்ற ரரசர்.

பாவாலே அவன்நாட்டை சித்தி ரித்துப்
பாரகா வியமே படைத்து விட்டால்
சாவாத என்கவிக் காயிரம் பொன்
தருவேன் நான்பரிசிலாய் எனத் தனது
நாவாலே மொழிந்திட்ட மன்னர் மஹ்மூத்
நந்நிலை மாறியே வெள்ளி யினை
ஏவலர் மூலமே அனுப்பி விட்டான்
அவர்தான அறங்காக்கும் நாட்டி னண்ணல்?

(தொடரும்)




எம். எஸ். அப்துல் ரஹ்மான்,
கிண்ணியா.

கே: பிரதம மந்திரி தனக்கு உதவி மந்திரி பதவியை வழங்க முன் வந்ததாகவும், தனக்குத் தன் தொகுதி வேலையே முக்கியமாதலின், பதவியை நிராகரித்து விட்டதாகவும் மூதூர் இரண்டாவது பிரதிநிதி திரு. மஜீத் ஒரு தமிழ் தினசரியில் அறிக்கைவிட்டிருந்தாரே, அது உண்மையா?

ப: அது ஒரு போலி அறிக்கையாம் சார்! அது அந்தப் பத்திரிகாலயத்துள்ளேயே சோடினை செய்யப்பட்டதாம்!

ஃ

எம். ஏ. எம். இப்ருகீம்,
பாண்டிருப்பு-1.

கே: நாட்டு மக்களின் மத்தியில் உபதேசம் செய்யும் சிறிமாவோ அம்மையார், பிரதமர் ஆசனத்தில் அமராமல் இருப்பதன் மர்மம் என்ன?

ப: அவர் பாராளுமன்றத்தில் பிரதமர் ஆசனத்தில் அமராவிட்டாலும் கூட பார்வையாளர் ஆசனத்தில் அமர்ந்து, பிரதமர் ஆசனத்தில் வேறுயாரும் அமர்ந்துவிடாதபடி கவனித்துக் கொள்கிறார்.

ஃ

தாமரைச் செல்வி இராமநாதன்,
பருத்தித்துறை.

கே: தமிழில் முகவரியிட்டு அனுப்பப்படும் தபால்கள் குப்பைக் கூடைக்குச் சென்று விடுமென பத்திரிகையொன்றினில் வெளியாகியிருந்த செய்தி உண்மையா?

ப: உண்மையோ, பொய்யோ நீங்கள் அனுப்பும் தபால்களெல்லாம் என் குப்பைக் கூடைக்குள் சென்று கொண்டிருக்கின்றன.

ஃ

தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்.

கே: மறைந்த தலைவருக்குத் தமிழினம் இறுதி மரியாதை செய்து, அனுதாபந் தெரிவிக்கும் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் ஒரு அனுதாபச் செய்தியாவது கூருமல் இருந்தாரே! காரணம் என்ன?

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: எதிரியாயினும் மறைந்தபின் மரியாதை செலுத்துவது மனிதனின் உயர்ந்த பண்பு. அந்தப் பண்பு அவரிடம் இல்லாதிருக்க முடியாது. தன்னிடம் மரியாதை இருந்தாலல்லவா அதைப் பிறருக்குச் செலுத்த முடியும் என்று கருதியே கிணற்றில் போட்ட 'கல்' ஆகிவிட்டாராம்.

கே: திரு. சுந்தரலிங்கம் அவர்கள் சிறிது காலம் பேசாமடந்தையாயிருந்து தற்பொழுது ஊர்காவற்றுறை இடைத்தேர்தல் அறிகுறி தென்பட்டவுடன் அறிக்கைவிடத் தொடங்கிவிட்டாரே!

ப: ஆமாம்! ஏதேனும் இடைத்தேர்தல் ஏற்படும் போதுதான் அவர் உறக்கத்திலிருந்து விழித்துக்கொள்வது வழக்கம்!

ஃ

பி. வி. மூர்த்தி,
காரைதீவு கி. மா.

கே: நான் மலரை விரும்புகிறேன், மலரும் என்னை விரும்புகிறது. நான் மலரைத் திருமணம் செய்து கொள்ளலாமா?

ப: செய்து கொள்ளுங்கள்-ஆனல் மலர் விரைவில் வாடிவிடுமே! ஏதோ அதுவரையாவது அதன் நறுமணத்தை அனுபவியுங்கள். விருப்பம் அதிகரித்து மலரைக் கசக்கி விடாதீர்கள்.

ஃ

சு. காசிப்பிள்ளை,
பெரியகல்லாறு.

கே: அன்று சிங்கள மொழியையும் அதன் சட்டத்தையும் ஏற்றுக்கொண்ட எம். எஸ். காரியப்பர் இன்று முஸ்லிம் மக்கள் மீதும் தமிழ் மக்கள் மீதும் பரிவு காட்டி அடிக்கடி தினசரியில் அறிக்கை விடுகிருரே. இதையிட்டுத் தங்கள் கருத்து யாது?

ப: தேர்தல் நெருங்கி வரும் செய்தி அவருக்கும் கிடைத்துவிட்டது போலும்! அதற்குப் போடும் வேடம் தான் இது அப்பனே!

அ. பாலச்சந்திரன்,
கட்டுக்காஸ்தோட்டை.

கே: ஊர்காவற்றுறை இடைத் தேர்தல் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன குயுக்தியாரே?

ப: அமரர் கந்தையாவின் கொள்கையைக் கடைப்பிடிப்பவர் யாரோ அவர் வெற்றி பெறுவார்.

சி. இ. பாக்கியநாதன்,
கொழும்பு.

கே: எதிர்வரும் ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் கா. பொ. இரத்தினம் அவர்கள் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக வதந்தி உலாவுகிறது. நடக்குமா?

ப: நடக்காது. கட்சியின் முடிவு எதுவோ அதுதான் அவர் முடிவு.

ஃ

டி. எஸ். ஜி. ராஜா, காவயல்.

கே: உங்களுடைய வாழ்க்கையிலே மறக்க முடியாத சம்பவம் எது?

ப: ஏகாதிபத்திய—எதிர்ப்புக்காக ஏகாதிபத்திய நீதி மன்றத்திலே தண்டனை பெற்ற சம்பவம்.


ஒரு ஆரோக்கிய குழந்தையும் ...குதூகலிக்கும் தாயும்



...நன்றி லக்டோஜனுக்கே

உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது—உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பண்டோதினேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |




நீங்கள் லக்டோஜனை நம்பலாம்

# பருத்தித்துறைப் பட்டினத்தை பழிப்புக்கிடமாக்கியவர்கள்

## பதவியிழந்தோட வழிதேட வேண்டும்

சில மாதங்களுக்கு முன்னே பருத்தித்துறையின் பெயர் பிரபலமாகியது. நல்ல முறையிலா என்று கேட்டால் 'அல்ல, அல்ல' என்றுதான் அவமானத்துடன் கூற வேண்டியிருக்கிறது. பருத்தித்துறை தமிழன்னையின் இதயத்திலே ஆருத புண்ணை உண்டாக்கித் தனக்கு மாருத களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டது.

எமை அழித்தொழிக்கக் கச்சை கட்டி நிற்கும் அரசாங்கத்தின் மந்திரி—மலை நாட்டு மக்களின் உரிமை காக்க எனது பிணத்தைக் கடந்துதான் போக முடியும் என்று கொக்கரித்தவர்— தமிழ் மக்களின் பரம விரோதி—தீவிர சிங்கள வகுப்புவாதி—பருத்தித்துறைக்கு விஜயம் செய்தார். ஏன் செய்தார்? பருத்தித்துறை மக்கள் பால்ஏற்பட்ட அன்பு காரணமா? அவர்களுக்குப் பாலும் தேனும் பெருகியோடும் பெரு வாழ்வு தரவா? துன்பங்கள் துடைக்கவா? இன்னல்கள் என்ன? என்ன? என்று கேட்டுப் பரிகாரம் தேடவா வந்தார்? நலம் நாடும் நண்பனுகவா வந்தார்? இல்லை! சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடையாள முத்திரையை எமது மத்தியிலே குத்த வந்தார். ஒரு தனிச் சிங்களக் கடையை—மீண்டும் கூறுகிறேம்—தனிச் சிங்களக் கடையைத் திறந்து வைக்க மந்திரி வந்தார். சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக எம்மை அவமானப் படுத்த வந்தார்.

வந்தவரை வாரித் தழுவி, நில பாவாடை விரித்து, மலர் மாலை சூட்டி, சாமரம் வீசி, ஆலவட்டம் பிடித்து, பட்டாசு கொளுத்தி, மேள தாளத்துடன் அழைத்து வந்தனர் இங்குள்ள சிலர். இந்த வரவேற்பை எதிர்த்து அமைதியான முறையிலே கறுப்புக்கொடி காட்டி நின்றவர்களைக் கூலிப்படை, கீழ்த்தரமான முறையிலே தமக்கே உரிய பாணியில் தாக்கியது. தன்னலத்திற்காக தமிழனே தமிழனுல் தாக்கப் பட்டான். மானம் காக்கப் புறப் பட்டான், மண்டையுடைபட்டான், மண்ணுக்குச் செங்குருதி தந்தான். மண் மாதா மனம் உடைந்தாள். தமிழ் மாதா தேம்பியழுதாள். மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் சீற்றம் கொண்டான்.

பருத்தித்துறை வாழ் பெரு மக்களே! உங்கள் நலனுக்காக உங்கள் பட்டின சபைக்கு உங்களால் அனுப்பப்பட்டவர்கள்-தங்கள் நலனுக்காக உங்கள் மானத்தை அடகு வைத்து விட்டார்கள்! இந்த அவமானத்தை எந்தக் கங்கையிலே கழுவித் தீர்க்கப் போகிறீர்கள்?

எமக்குத் தெரியும் உங்கள் இதயத் துடிப்பு! பேரும் புகழும், சீரும் சிறப்பும்

**அறிவழகன்**

தேடித் தர வேண்டியவர்கள் பாழும் அவமானம் தேடித் திரட்டினர்களே என்று உங்கள் உதிரம் கொதிக்கிறது. பொறுக்க முடியாத சினத்தினுல் நீங்கள் பொருமுவது தெரிகிறது. பழிக்குப் பழி வாங்க வேண்டிய காலம் வந்து விட்டது. அவமானம் துடைக்க வேண்டிய காலம் அருகிவிட்டது.

உங்கள் பட்டினசபை நகர சபையாக மாறிய பின் நடக்கப்போகும் முதல் தேர்தலிலே இந்தத் துரோகக் கும்பலைத் தொலைத்து விடுங்கள். தமிழ் காக்கும் மறவரைத்தேர்ந்தெடுத்துக் களங்கம் துடையுங்கள்.

ருசி கண்ட இப்பூனைகள்—தங்கள் லீலைகள் நடுத் தெருவுக்கு வந்து விடுமோ என்று அஞ்சி — மதுவைத் தந்து மதியை மயக்க முனையலாம். பணத்தைக்காட்டிப் பல்லையிளிக்கலாம். காலா காலமெல்லாம் உங்களை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழ்ந்த இவர்கள் இப்போது மட்டும் கூழைக் கும்பிடு போடுவதேன்? ஏதாவது உதவி நாடிச் சென்ற போதெல்லாம் 'உங்களை எனக்குத்தெரியாதே' என்று உதட்டைப் பிதுக்கியவர்களெல்லாம் 'அட நான் உங்களுக்குச் சொந்தம்' என்று சுற்றிவளைத்து ஒரு உறவைக் காட்டி நிற்பதேன்? 'இருல்' போட்டுச் 'சுரு' பிடிக்கப் பார்க்கிருர்கள் பேராசைக்காரர்கள்! இந்த திடீர் அன்பால் ஏமாந்து மானத்தை அடகுவைப்பவர்களை—உங்களை உறிஞ்சிவாழுபவர்களைத்—தேர்ந்தெடுக்க வேண்டாம். அப்படிச் செய்வது உங்கள் இனத்திற்கு நீங்கள் செய்யும் துரோகம்.

பருத்தித்துறை மக்கள் மட்டுமன்றி தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தமது உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தமிழ் காக்கும் தலைவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணரும் காலம் வந்து விட்டது. 'அந்த மனுசன் எனக்கு உறவு' என்றோ—'அந்தத் தம்பியை அனுப்பினுல் நானைக்கு ஏதாவது அலுவல் செய்விக்க வசதியாயிருக்கும்' என்றோ தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் மடமையை ஒழிப்போம். தன்னலத்திற்காகத் தேர்ந்தெடுத்துத் தமிழினமே தாழ்ந்துவிட்டது. தனி மனிதர்களுக்காக வாக்குப் போட்டுத் தலைகுனிவு ஏற்பட்டு விட்டது. ஒருவர் எவ்வளவோ பணக்காரராய், பெரியவராய் இருக்கலாம். அதனுல் எங்கள் சமுதாயம் உயர்வுருது. அவர் ஊருக்கு உழைக்கும் உபகாரியாய், தமிழைக் காக்கும் தலைவராய் இருந்தாலே உங்கள் பிரதிநிதியாக உள்ளூராட்சி மன்றத்திற்குச் செல்லும் தகுதி பெற்றவராவார். இதை ஒவ்வொரு தமிழனும் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்திற்குத் தமிழரகப் பிரதிநிதிகளை அனுப்பினோம்—எமக்கு மாறான சட்டங்களை எதிர்க்க, கண்டனக்குரல் எழுப்ப, எமது கோரிக்கைகளை எடுத்துரைக்க. அது மட்டுமல்ல, துரோகக் கும்பல் பாராளுமன்றத்திலே நுழைந்துஎமது இனத்தை விற்று விடாமலும் இருக்கச் செய்ய இவர்களை அனுப்புவதவசியமாகிறது.

இது போலவே எமது உள்ளூராட்சி மன்றங்களிலேயும் தமிழரகப் பிரதிநிதிகள் அங்கம் வகித்தால் நாளடைவில் எமது பிரதேச அலுவல்கள் தமிழிலே நடைபெறும். எமது இலட்சியம் கைகூடும். அது மட்டுமல்ல, பருத்தித்துறையில் நடந்தது போன்ற மானங்கெட்ட ஒரு செயல் இனி நடைபெருது. தமிழ் வாழ நாமும் வாழ்வோம். ஆகையால் உங்கள் தொகுதிகளிலே போட்டியிடும் தமிழரசுப் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுங்கள். அவர்கள் போட்டியிடாத தொகுதிகளிலே அவர்களை ஆதரிக்கக் கூடியவர்களைத் தேர்ந்தெடுங்கள்.

## தமிழில் செய்க

குடிசன மதிப்பீடு சம்பந்தமாக பல தகவல்களையும் சேகரிப்போர் ஒவ்வோர் வீட்டுக்கும் இவ்வாரம் தொடங்கி வருவார்கள், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் விபரங்கள் கோரும் பத்திரங்கள் அவர்களிடம் உள்ளன. அப்பத்திரங்களை எப்படி நிரப்புவது என்பதை விளக்க விவரங்கள் அடங்கிய ஓர் புத்தகமும் குடிமதிப்பு இலாகாவால் வெளியிடப்பட்டுள்ளது. இப் புத்தகமும் மூன்று மொழியிலும் வெளியிடப் பட்டிருக்கின்றது.

கொழும்பு நகருக்கு தமிழ்ப் புத்தகங்கள் வினியோகிக்கப்படத் தேவையில்லை என்ற காரணத்தினுல் சிங்கள, ஆங்கிலப் புத்தகங்களை மட்டும் வினியோகிக்க ஆரம்பித்தனர். கொழும்பில் கணிசமான தொகைத் தமிழ் பேசுவோர் இருப்பதனுல் தமிழில் அப் புத்தகங்களை வினியோகிக்க வேண்டுமென்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், குடிசன மதிப்பு இலாகாத் தலைவரைக் கேட்டுக் கொண்டார். இதற்கிணங்க தமிழிலும் இப் புத்தகம் கொழும்பில் வினியோகிக்கப்படும்.

இலங்கை எங்கணுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமிழ் படிவங்களையும், தமிழ் விபரப் புத்தகங்களையும் கணக்கெடுப் போரிடம் கேட்டுப் பெற்று, தமிழ் மொழியிலேயே பூர்த்தி செய்ய வேண்டும்.




# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:

T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


# தமிழ் ஒழிப்பு ஆரம்பமாகி விட்டது

## ஒற்றுமைக் குரலெழுப்பி உரிமை பெற வாரீரோ!

தமிழ் பேசும் மக்கள் விழுந்து விழுந்து சிங்களம் படித்தாலும் வருங்காலத்தில் பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே இந் நாட்டின் நிர்வாகத் துறையில் இடம் கிடைக்கும் என்பதைப் பல முறை இடித்துக்காட்டியுள்ளோம். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரே அணியில் நின்று நமது உரிமைகளுக்காக ஏகோபித்த குரல் எழுப்பினுல்தான் வெற்றி காண முடியும்—விடிவு ஏற்படும் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேம்.

தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளில் நடைபெற்றுவரும் முயற்சிகள் சிலவற்றைக் கீழே தருகிறேம்.

அண்மையில் நடைபெற்ற பொது எழுது வினைஞர் பரீட்சையின் முதல் முடிவுகளில் 156 பேர் சித்தி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஆக இருவர்தான் தமிழ் பேசும் இளைஞர்கள். எஞ்சிய மொத்தம் 154 பேரும் சிங்களவர்கள். சித்தியெய்திய ஒரு தமிழரும் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையில் சித்தியெய்திய காரணத்தால் எழுதுவினைஞராகக் கடமை பார்க்கப் போவதில்லை எனத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் வகையில் இந்தப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலாவது சிறிதளவு தமிழ் உபயோகத்திலிருப்பதற்கு இந்த நடவடிக்கை இடமளிக்காது. சிங்களம் மட்டும் மொழி மூலம் தமிழ் மொழியை மட்டுமல்ல, தமிழ் பேசும் இனத்தையே குழிதோண்டிப் புதைக்கச் சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் காரியமாற்றுகின்றனர் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

மத்திய வங்கியில் சேவைசெய்வதற்காகத்தேர்வு நடைபெற்ற போதும் தமிழ் பேசும் மக்கள் ஒதுக்கப் பட்டுள்ளார்கள். முதற் தேர்வில் ஒரே ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் சிங்களத்தில் போதிய அறிவு பெற்றவராக இருந்தும் கூட இரண்டாம் தெரிவிலே நீக்கப்பட்டு விட்டார். தனிச் சிங்களவர்கள் மட்டுமே மத்திய வங்கியில் கடமை பார்க்க வேண்டுமென்று மேலிடத்து உத்தரவாம்.

தபால் இலாகாவில் தமிழ் ஒழிப்பு மும்முரமாக நடைபெறுகிறது. ஊழியர்களுக்கு இதுவரை அனுப்பப்பட்டு வந்த சேவைத் தந்திகள் திடீரென சிங்கள மொழியில் அனுப்பப்பட்டமையினுலும், தமிழ் ஊழியர்களுக்கு வேலை பறி போகும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது.

அரசாங்க ஊழியர்கள் தங்கள் இலவச புகைவண்டிப் பணச் சீட்டுகளுக்கு இனிமேல் ஆங்கிலத்தில் தானும் விண்ணப்பித்தலாகாதாம். சிங்களத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டுமாம். அப்போதுதான் பிரயாணச் சீட்டுக் கிடைக்கும்

கொழும்பிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்கள விடுதலைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் சிங்களத்தில் மட்டுமே உள்ளன. விடுதலை விண்ணப்பங்களும் சிங்களத்தில் இருந்தால் மட்டும்தான் இனிமேல் விடுதலை வழங்கப்படும் போலும்.

தலைமைத் தபால் நிலையத்திலிருந்து வினியோகிக்கப் படும் அடையாளச் சீட்டுகள் இப்பொழுது சிங்களத்தில் மட்டும் வினியோகிக்கப்படுவதாகத் தெரிகிறது. இது காலவரை எந்த மொழியில் விண்ணப்பம் அனுப்பப்படுகிறதோ அதே மொழியில்தான் இவ்வடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டு வந்தன. இப்பொழுது எம் மொழியில் விண்ணப்பித்தாலும், சிங்களத்திலேயே அடையாளச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

அவசரமான வேலைகளில் பரீட்சைக்கு இருக்க வேண்டியவர்கள் சிங்கள அடையாளச் சீட்டுகளைப் பெற்றேயாக வேண்டியிருந்தது. பலர் இந்த அநீதியையிட்டுத் தபால் நிலைய அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

வீடமைப்பு இலாகாவின் பாவனைக்காக, தமிழரசுத் தலைவர்களின் தலையீட்டின் காரணமாகப் பல படிவங்களும் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளன. இந்த இலாகாவில் எதற்கு விணணப்பித்தாலும் சிங்களப் பத்திரங்களையே அதிகாரிகள் அனுப்பிவைப்பது வழக்கமாக விருந்து வருகிறது. சிங்களத்துக்குப் பதிலாக ஆங்கிலப் பத்திரங்களையே தமிழ் பேசும் மக்கள் அதிகமாக விரும்பிப் பெறுகின்றனர். தமிழ்ப் படிவங்கள் யாவும் ஒரு மூலையில் பத்திரமாகத் தூங்குகின்றன.

தமிழ் பேசும் மக்கள் தங்கள் தேவைகளுக்காகத் தமிழ்ப் பத்திரங்களைப் பெற்றுக்காரியம் பார்க்காவிட்டால், தமிழ் புறக்கணிக்கப்படுவதுடன் தமிழ்ப் பத்திரங்கள் எதுவும் இவ்விலாகாவில் அச்சிடப்படுவதும் நிறுத்தப்பட்டு விடும்.

'ஸ்ரீ லங்கா' என்ற மாத சஞ்சிகை இதுவரை மும் மொழியிலும் வெளியாகிவந்தது. தற்பொழுது தமிழ்ப் பிரசுரம் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனுல் தமிழ் ஊழியர்கள் சிலர் வேலை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

# புதிய சகாப்தம் தோன்றியுள்ளது

## இரத்தினபுரி இ. தொ. க. அலுவலகத்தில் தென்னரசு முழக்கம்

"இலங்கைத் தொழிலாளர் கழகம் இரத்தினபுரி மாவட்டத்தில் இயங்க ஆரம்பித்திருப்பதின் மூலம் இப்பகுதி மலை வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது ஏனைய பகுதி மலையக மக்களுக்கும் ஒரு புதிய நல்ல சகாப்தம் தோன்றியுள்ளது" இவ்வாறு இ. தொ. கழகப் பிரமுகர் திரு. தென்னரசு கழகத்தின் இரத்தின புரி மாவட்டக் கிளை அலுவலகத்தை இம் மாதம் 2-ந் திகதி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

இ. தொ. க. இரத்தினபுரி மாவட்டக் கிளையின் அலுவலகம் இரத்தினபுரி ஆஸ்பத்திரி ரோடு, 6-ம் எண் கட்டடத்தில் திறந்துவைக்கப் பட்டது.

திரு. தென்னரசு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"மலையகத்தில் தமிழரசுக் கட்சி இ. தொ. க. வை ஆரம்பித்தவுடன், ஐயகோ! தமிழரசே! உங்கள் தலைவிதி இப்படியா? வேண்டாம், இயங்காதீர்கள்! தோட்டத் தொழிலாளர்கட்கு அரசியல் கட்சிகளினுல் இயக்கப் படும் தொழிலாளர் சங்கங்கள் தேவையில்லை எனக் கூப்பாடு போட்டனர், காங்கிரஸின் பெருந் தலைவர்கள்.

அரசியல் கட்சிகளான ஒரு சமசமாஜ கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழரின் உரிமைகளைப் பறித்த ஸ்ரீலங்கா கட்சி போன்றவைகள் தோட்டப் பகுதி மக்களுக்கென யூனியன்களை ஆரம்பித்த போது எதிர்க்காத காங்கிரஸார், தமிழரசுக் கட்சி மலை வாழ் மக்களின் நலன் குறித்து சேவை செய்ய புகுந்தபோது எதிர்ப்பானேன்?

இதே காங்கிரஸார், வடக்கு, கிழக்கு மாகாண கட்சி ஏன் மலையகத்திற்கு வருகிறது? என்றும் கூறினர். அப்பகுதியிலேயே இருந்தால் என்ன? என்ற வினவையும் எழுப்பினர். ஆனல் யாழ்ப்பாணத்திலே, வவுனியாவிலே, மன்னரிலே, காங்கிரஸார் கிளைகளை ஏற்படுத்தியபோது மலையக இயக்கம் ஏன் வடக்கு கிழக்கிற்கு எனத் தமிழரசுக்கட்சி எதிர்க்கவில்லை என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எமது கழகத்தை ஒரு புதிய வகுப்பு துவேஷ இயக்கம் என திரித்து தொழிலாளர்களையும், ஏனைய மக்களையும் ஏய்க்கப்பார்க்கின்றனர் வகுப்புவாதிகள்.

எமது கொள்கையே இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களுடன் சகோதர சிநேக பாவத்துடன் உடனிருந்து வாழுவதேயாகும். இவ்வடிப்படையிலேயே மொழிவாரி இராஜ்ஜியங்கள் கொண்ட ஓர் சமஷ்டி அரசே ஈழம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பேசும் நாட்டிற்குச் சாலச் சிறந்த அரசியல் திட்டம்".

### உபதலைவர் திரு. இராமன் பேச்சு

அடுத்து, இ. தொ. க. உபதலைவர் திரு. கே. ஏ. இராமன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அட்டன் மா நகரிலே தமிழரசத் தந்தையவர்கள் கூறினர்கள், "இன்று நாம் ஒரு புனிதமான காரியத்தைச் செய்திருக்கின்ருேம். எப்படியும் நாம் வளர்வோம்' என்று.

தந்தையவர்களின் கருத்து இன்று உண்மையாக கண் முன்னல் நடந்துகொண்டிருக்கிறது. ஆரம்ப காலத்தை விட இன்று நாம் பன்மடங்கு வளர்ந்துவிட்டோம். இனி தொடர்ந்து வளர்வோம். எமது வளர்ச்சிக்கு தடை காண புறப்படுவோர் புறமுதுகு காட்டி ஓட நாம் சேவை மூலம் உணர்த்துவோம்".

அடுத்து திரு. எம். சிவனு பேசினர். கழகக் கிளை செயலாளர் திரு மு. கந்தையா நன்றியுரை கூறினர்.

# மலையகம்

## கணவனுக்கும் மனைவிக்கும் வேலை நீக்க அறிவித்தல்

### காங்கிரஸ் சங்கம் இதற்கு உடந்தையா?

அக்கரப்பத்தனையைச் சேர்ந்த தமிழக்கொலை தோட்டத்தில் ராமசாமிக்கும் அவரின் மனைவிக்கும் தோட்ட நிர்வாகம் ஒரு மாத வேலை நீக்க அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

2-5-63 திகதியிட்ட இந்த வேலை நீக்க அறிவித்தல் கடிதத்தில் "ராமசாமியும் அவரின் மனைவியும் அறிவித்தல் காலம் (ஒரு மாதம்) முடிந்ததும் வீட்டைக் காலி செய்ய வேண்டும்" என்று தோட்டத்துரை குறிப்பிட்டிருக்கிருர்.

ராமசாமி இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காண நமது கழகத்தின் உதவியை நாடினர். தனக்கும் தன் மனைவிக்கும் வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது அசாதாரணமானது, அநியாயமானது என்று அவர் முறையிட்டார்.

கழகம் நடவடிக்கை எடுத்தது. "ஏன் இந்த வேலை நீக்கம்?" என்று தோட்ட நிர்வாகத்தை வினவியது.

தோட்டத்துரை தொண்டமான் காங்கிரசுடன் முடிவு செய்து விட்டாராம். "உங்களுடன் பேச விரும்பவில்லை" என்று பதில் கடிதம் எழுதியிருக்கிருர்.

"அப்படியானல் அந்த விவரங்களைக் கொடு, ராமசாமியும் அவரின் மனைவிக்கும் வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதற்கு காரணம் வேண்டும்" என்று கழகம் மீண்டும் தோட்டத்துரையை வற்புறுத்தியிருக்கிறது.

"எங்களை வேலை நீக்கம் செய்ய என்ன தீங்கு செய்தோம். காங்கிரஸ் இதற்கு உடந்தையா" என்று கோருகிருர்கள் ராமசாமியும் அவர் மனைவியும்.

## பொலீஸ் அதிகாரி மீது புகார்

நுவரெலியாப் பகுதிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உதவி அதிகாரி ஒருவர் அங்கு வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கு எண்ணற்ற திங்குகளைச் செய்ய முற்பட்டார். நடுநிசியில் வீடுகளுக்குள் புகுந்து 'கள்ளக் குடியேற்றக்காரர்கள்' என்ற குற்றச்சாட்டைக் கூறி பரம்பரை பரம்பரையாக இப்பகுதியில் வாழ்ந்தவர்களைக் கைது செய்துவருவதாகவும், மக்களுக்கு அச்சத்தை ஊட்டுவதாகவும் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கு நுவரெலியா வாசிகள் பலர் முறையிட்டனர். திரு. செல்வநாயகம் இதையிட்டு பொலீஸ் இலாகா அதிபருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து நுவரெலியா பொலீஸ் உதவி அதிகாரியின் அட்டகாசங்கள் குறைந்திருப்பதாகத் தெரிகிறது.

## திரு. சாமி மறைவுக்கு அனுதாபம்

இலங்கை வாழ் அருந்ததியர் சமூகத்தின் நலத்துக்காக அரும்பாடுபட்டவரும், பெரியார் ஈ. வே. ராவின் சுயமரியாதை இயக்கத்தை இலங்கையில் பரப்புவதற்காக முயற்சிகள் செய்தவருமான திரு. ஒ. ஆர். மா. சாமி அவர்கள் கடந்த 4-6-63ல் இயற்கை எய்திவிட்டார். அன்னருக்கு இறுதி மரியாதை செலுத்துமுகமாக 6-6-63 மாலை 5 மணியளவில் மாதம்பிட்டி மயானத்தில் அருந்ததியர் சங்கத் தலைவர் திரு. எஸ். சுந்தரராஜன் தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் கு. யா. திராவிடக்கழல், கு. க. பிச்சையப்பா, மா. பெ. பாரதி, மூ. வேலாயுதம், அ. பொன்னையா, க. பி. பூபாலர் ஆகியோர் திரு. சாமியின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.




வலியால் அவஸ்தைப்படுவானேன்?

டிஸ்பிரின்

வலியை உடனே நிவாரணிக்கின்றது



டிஸபிரின் பரிபூரணமாகக் கரைந்து, உடனடியாகச் செயலாற்றுவதால் துரித நிவாரணம் ஏற்படுகின்றது.

தடிமன், சளிச்சுரம், தசை மற்றும் நரம்பு வலிகள் நோவுகள், பல்வலி மற்றும் மாதரின் சூதக வலிகளுக்கு உடனடி நிவாரணம் காண டிஸபிரினை எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்.

டிஸ்பிரின் உங்கள் டாக்டரால் சிபார்சு செய்யப்படுகின்றது.




DSC/JWT/4

டிஸ்பிரின்

பரிபூரணமாகக் கரைகின்றது.

ரெக்கிட் அன் கொல்மன் ஆப் சிலோன் லிமிட்டெட்.

ஏஜண்டுகள்: ஈ. பி. கிரீஸி அன் கம்பெனி லிமிடடெட்

55/57, இராணி வீதி, கொழும்பு 1.

டிஸ்பிரினில் பினசெட்டின கலப்பு கிடையாது.

# வனுந்தரப் போர் பயிற்சி ஏன்?

“ஹுடுகம, ஆட்டிகல என்னும் இரு இராணுவ அதிகாரிகளைக் கொரில்லாப் போர்ப் பயிற்சி பெறும் பொருட்டு யூகோஸ்லாவியாவுக்கு அனுப்பியிருப்பது குறித்து பொது மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது” என்று ‘நிதஹஸ’ என்னும் சிங்கள வாரப் பத்திரிகை இம்மாதம் 16ம் திகதி இதழில் கூறுகிறது. (இப்பத்திரிகை அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சோமவீர சந்திரசிரியை அதிபராகக்கொண்டது)

### கரு மேகம் கலையவில்லை

இப்பத்திரிகைச் செய்தி மேலும் கூறுவதாவது:—

‘சர்வாதிகார ஆட்சிமுறையைத் தான் ஏற்கப் போவதில்லை என்று பிரதமர் கூறியிருப்பினும் இன்னும் சர்வாதிகாரக் கருமேகம் இத்தீவைச் சூழ்ந்துகொண்டு தான் இருக்கின்றது

கொரில்லாப் போர் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நடத்தும் ஒருபோராட்ட முறையாகும். இலங்கையில் அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே அத்தகைய போராட்டமொன்று நிகழும் அறிகுறிகள் கூடத் தென்படவில்லை. இந் நிலையில் பொதுப் பணத்தைச் செலவு செய்து கொரில்லாப் போர் முறையினைப் பயில இரு இராணுவ அதிகாரிகளை யூகோவுக்கு அனுப்ப வேண்டிய தேவை எப்படி ஏற்பட்டதென மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இதற்கிடையே, 25 ஆண்டுகள் செங்கோலோச்சப் போவதாகத் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும், 100 ஆண்டுகள் ஆட்சி புரியப் போவதாக அவரது சகா ஒருவரும் கூறியிருப்பதும் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

சந்தேகத்துக் குரிய மற்றொரு காரணம், சர்வாதிகாரம் நிலவும் நாடுகளில் தூதராகக் கடமையாற்றி அனுபவம் பெற்ற திரு. ஏ. பி. பெரேராவை நீதி மந்திரியாக நியமனம் செய்ய முயன்று வருவதுதான்.

### மீண்டும் அவர்......

இந்தச் சந்தேகங்களுக்கிடையே கடந்த வாரம் ஹேன்பிட்ட கெதர ஞானசீக தேரோ அலரி மாளிகைக்குச் சென்று வந்து சொன்ன சொற்களும் சந்தேகத்தை மேலும் வலுவடையச் செய்துள்ளன.

சென்ற புதன்கிழமை ஞானசீக தேரோ அலரி மாளிகைக்குச் சென்று, பிரதமருடன் சிறிது நேரம் சம்பாஷணை நடத்திவிட்டு, வெளியே வந்ததும்—

“இதைத்தானே நான் எப்போதும் கூறுகிறேன். இதைச் செய்யாமல் இந்த நாட்டைச் சீர்படுத்த முடியாது” என்று கூறினார்.

அவர் எப்போதும் கூறி வருவது இலங்கைக்குச் சர்வாதிகார ஆட்சி வேண்டுமென்பதே.

### உதவி மந்திரிப் பதவிகள்

மொனராகல பா. உ. திரு. அல்பர்ட் சில்வா, மாவனெல்ல பா. உ. திரு. ஆர். பி. ரத்னுயக்கா, மாவத்தகம பா. உ. திரு. சி. பி. விக்கிரமசிங்க, பிங்கிரியா பா. உ. திரு. எல். பி. ஜயசேஞ ஆகியோர் தங்களுக்கு உதவி மந்திரிப் பதவிகள் கொடுக்கப்படாததால் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று ‘நிதஹஸ’ பத்திரிகை கூறுகிறது.

தம்புல்ல பா. உ. திரு. டி. பி. தென்னகோன் ஒரு மந்திரிப் பதவியை எதிர்பார்த்திருந்தாரென்றும், ஆனல், அவருக்குக் கிடைத்ததெல்லாம் உதவி மந்திரிப் பதவியில் மாற்றந்தான் என்றும் இப் பத்திரிகை எழுதுகிறது.

## சிங்கள இதழ்களில்...

### ரூ. 6000 வீண்!

சீனவில் இலங்கைத் தூதராயிருக்கும் திரு. ஏ. பி. பெரேராவை அங்குமிங்கும் அனுப்புவதில் அரசாங்கம் ரூ. 6000 க்கு மேல் செலவு செய்திருக்கிறது என்று 14-6-63ல் வெளியான “சமசமாஜய” என்னும் சமசமாஜக்கட்சியின் சிங்கள வாரப் பத்திரிகை தெரிவிக்கிறது.

“இந்தியாவில் இலங்கைத் தூதராக நியமிக்கப்படுபவர் ஒரு பௌத்தராகவே இருக்க வேண்டும்” என்று வற்புறுத்தி இலங்கை மகாபோதி சங்கத்தின் பிரபல சிங்களப் பத்திரிகையான “சிங்கள பௌத்தயா” 15—6—63ம் திகதி இதழில் முதற் பக்கத்தில் 8 பத்தி தலைப்பின் கீழ் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது. அச் செய்தி கூறுவதாவது:— “தற்போது காலியாகியுள்ள இந்தியாவில் இலங்கைத் தூதர் பதவிக்குப் பௌத்தரல்லாத ஒருவரை நியமனஞ் செய்யப் போவதாகக் கூறப்படுகிறது. அஃது உண்மையாயின் பௌத்தர்களுக்கு அதனல் பாதகம் ஏற்படும். தூதர் பதவிகளைப் பொறுத்தவரையில் பௌத்தர், பௌத்தரல்லாதோர், என்ற பாகுபாடு தேவையில்லை என்று சிலர் கூறலாம். ஆயினும் அவர்களின் கருத்து இந்தியாவில் இலங்கைத் தூதர் பதவியைப் பொறுத்த வரையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. அதனல் புத்தகயாவில் இந்துக்களின் கை வலுவடையக் கூடும். நான்கு கோடி பௌத்தர்கள் வசிக்கும் இந்தியாவில் பௌத்த நாடான இலங்கையின் தூதர் ஒரு பௌத்தராகவே இருக்க வேண்டும்.”

மந்திரிப் பதவி வழங்குவதற்கென இலங்கைக்கு அழைப்பதற்கும் சில்லறை விடயங்களுக்காக ஜெனிவாவுக்கு அனுப்புவதற்கும் பொதுப் பணத்தை விணடிப்பது பெரும் குற்றமாகும் என்று இப்பத்திரிகை கூறுகிறது.

திரு. டட்லி சேனநாயக்கா தனது தொகுதியான தெதிகமப் பகுதியிலிருந்து முற்போக்கு கருத்துகளைக் கொண்ட அரசாங்க அதிகாரிகளை வேறு இடங்களுக்கு மாற்றஞ் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளாரென்று இந்தப் பத்திரிகை குற்றஞ் சாட்டுகிறது.

தென் வியட்நாமில் பௌத்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைஎதிர்த்து கிளர்ச்சி செய்யவில்லை என்று இப்பத்திரிகை யு. என். பியைச்சாடுகிறது.

இதே கருத்தைத் தெரிவிக்கும் கொம்யூனிஸ்ட் கட்சியின் சிங்களப் பத்திரிகை ‘மவ்பிம’ (15—6—63) இது பற்றி இலங்கை அரசாங்கம் ஐ நா. வில் புகார் செய்வது மட்டும் போதாதென்று கூறுகிறது.

### பாராளுமன்றக் குழுவில் ஒரு புரட்சி

சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம் இதுவரை நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றத் தவறிவிட்டதென்றும் அவ்வப்போது

(9-ம் பக்கம் பார்க்க)

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## கல்லூரிக் கங்காணியின் கயமைத்தனம்

பட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஒரு கல்லூரி ஊழியர் ஒருவர் அடிக்கடி கொழும்புக்கு வந்து கல்வி இலாகாவின் பின் புறக்கதவுகளில் தவமிருப்பதாக அம்மானுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவருடன் அரசியலில் முறிந்து விழுந்தவரும், பின்னேற்றத்துக்காகப் பாடுபடும் ஒரு ‘முன்னணி’யின் தலைவரெனப் படுபவரும் காணப்படுகின்றார் என்றும் தெரிகிறது.

கல்லூரி ஊழியரின் ஊழல்கள் பற்றி ஊர் அறியும். தேடி வரும் மாற்றங்களையெல்லாம் திருகுதாளங்கள் மூலம் திருப்பிவிட்டு எல்லோருக்கும் ‘டிமிக்கி’ கொடுப்பவர். அது மட்டுமா? அவரின் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் ஒன்ரு, இரண்டா?

கல்லூரியில் கடமை பார்க்கும் சிலருக்கு இலவசப் புகையிரதப் பிரயாணச் சீட்டுகளை பொய்க் கையொப்பமிட்டு வழங்கியிருக்கிருராம்.

கலாசாலை விடுதியில் தங்கும் மாணவர்களுடைய பணத்தையெல்லாம் சொந்தச் செலவுகளுக்குப் பாவித்துவிட்டு, சரியான கணக்கு விபரங்கள் தராமலும், மீதிப் பணத்தை அதிபரிடம் ஒப்படைக்காமலும் கணக்காளர் யாராவது வந்தால் அவர்களுக்கு ‘கணக்கு’வைப்பதும் இவருடைய கிரமமான வேலைகளாம்.

கல்லூரி உத்தியோகத்தர்கள் பலரின் முன்னிலையிலும், கல்வி இலாகா ஊழியர்கள் முன்னிலையிலும் வைத்து கல்லூரிப் பதில் அதிபரையே உதாசினமான வார்த்தைகளால் அவமதித்துப் பேசினராம்.

இத்தகைய மோசடிகளுக்கும் குற்றங்களுக்கும் தன்னை ஆளாகிக் கொண்டுள்ள ‘இவர்’ பற்றி பல முறை அம்மானுக்குத் தகவல்கள் கிடைத்தன. இனிமேலாவது இவருடைய அட்டகாசங்கள் அடங்குவதற்கு வழி பிறக்குமா? என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

●

பதுளை மாவட்டத்திலுள்ள ஒரு தமிழ்ப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவிருக்கும் ஒருவருடைய மகள் சிங்களத்தில் எஸ். எஸ். சி. சித்தியடைந்தாராம். அவருக்கு ஒரு பதவியை வாங்கிக் கொடுக்க வசதி தேடி தலைமை ஆசிரியர் அவதிப்பட்டுத் திரிந்தாராம். தான் கல்வி கற்பிற்கும் பாடசாலையிலேயே தனது மகளைச் சிங்கள ஆசிரியராக்கும் ‘பாக்கியம்’ கிடைக்கப் பெற்றதும் கவலையை மறந்து மகிழ்ச்சியில் திளைக்க ஆரம்பித்ததும், அவருக்குக் கஷ்ட காலம் ஆரம்பித்தது. பாடசாலை மாணவர்களும் பெற்ருேர்களும் சிங்களத் திணிப்பை எதிர்த்துப் போர்க் கோலம் பூண்டுவிட்டனர். போர் தொடருகிறது. பொறுத்திருந்து முடிவைப் பார்ப்போம்.


## இந்துப் பல்கலைக் கழகமும் கொம்யூனிசப் பாராட்டும்

இந்துப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு செனெட்டர் நடேசபிள்ளை முயற்சித்து வருவதை இலங்கை கொம்யூனிஸ்டுகள் பாராட்டியுள்ளனர். இச் செய்தி பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. மத சம்பந்தப்பட்டவற்றை பிற்போக்குப் பித்தலாட்டம் என்று வர்ணிக்கும் கொம்யூனிஸ்டுகள் இந்துமத சம்பந்தமான முன்னேற்றத்துக்கு வாழ்த்துக் கூறுவதையிட்டு அம்மானும் ஆச்சரியப்பட்டு அடிப்படை என்ன என்பதை ஆராயப் புகுந்தார்.

‘சோழியன் குடுமி சும்மா ஆடுமா?’ பட்டம் பெற்ற பல் பட்டதாரிக் கொம்யூனிஸ்ட்டுக் குஞ்சுகள் பல இருக்கின்றன. இவர்கள் சிலர் பல்கலைக் கழகத்துள்ளும் புகுந்துள்ளனர். எனினும் புதிய அமைப்புக்குள்ளும் இடம் பிடித்துக் கொள்ளவே திட்டமிட்டு விட்டனர். ஆகவேதான் வாழ்த்துப் பாட ஆரம்பித்துள்ளனர் என்பது புலப்பட்டுவிட்டது.

இலங்கைப் பல்கலைக் கழகத்துள்ளிருக்கும் இந்த முற்போக்குத் தம்பிரான்கள் தம்மை ஆதரிக்காதவர்களை ‘ஒரு கை பார்த்துவிடுவோம்’ என்று மிரட்டியும் பார்க்கின்ருர்களாம். ‘இதுகள்’ இந்துப் பல்கலைக் கழகத்துக்குள்ளும் நுழைந்து கொண்டால்......?


Dial 2739




ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

# எட்டப்பர்களைச் சுட்டுத்தள்ளும்படி தொண்டர்கள் பணிக்கப்பட்டனர்

## அரங்கம் 13

உலக மகா யுத்தம் முடிவடைந்து விட்டது. பிரான்சின் தலைநகரான பரிஸ் நகரத்தில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேரவையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கக் குடியதிபதி வில்சன் புறப்பட்டார். அவரை அயர்நாட்டுக்கும் வந்து போகும்படி பேராசிரியர் மக்னீல் தலைமையில் டப்ளினில் நடைபெற்ற கூட்டமொன்றில் அழைப்பு விடுக்கப்பட்டது.

## சிறைச்சாலையில் விடுதலை முழக்கம்

இந்நேரத்திலும் சிறைச்சாலைகளில் பழைய பல்லவி ஆரம்பித்தது. ஜோன் தோறன் என்ற இளைஞர் கொலைக் குற்றவாளிகளுடன் அடைக்கப்பட்டு இம்சிக்கப்பட்டார். தன்னை அரசியற் கைதியாகக் கணிக்க வேண்டும் என்னும் அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இவரை அதிகாரிகளின் தொல்லைகளிலிருந்து மீட்பதற்காக மற்றக் கைதிகள் ஒஸ்ரின் ஸ்ரக் தலைமையில் முயற்சிகளை ஆரம்பித்தனர்.

கைதிகள் அனைவரும் ஒவ்வொரு நாட் காலையிலும் ஆலயத்திற்குப் போய்ப் பிரார்த்தனை செய்வது வழக்கம். ஒரு நாள் பிரார்த்தனை முடிவடைந்ததும் மற்றத் தொண்டர்கள் தோறனைத் தமது பிரிவுக்குப் பலாத்காரமாக அழைத்துச் சென்றனர். அவரை விட்டு விடுமாறு அதிகாரிகள் கேட்டனர். தோறன் அரசியற் கைதியாகக் கணிக்கப்படுவார் என்ற உறுதி மொழி அளித்தாலன்றி அவரைத் தாம் விடப் போவதில்லை என்று தொண்டர்கள் விடாப்பிடியாக நின்றனர். அது மட்டுமல்லாது, தோறன் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டால் தம்மிடம் இருக்கும் இரும்புக் கம்பிகள் அதிகாரிகளைப் பதம் பார்க்கும் எனவும் எச்சரித்தனர். ஒரு வாரமாகச் சிறை அதிகாரிகளை இவ்வாறு பயமுறுத்தினர்; சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறி நின்று குடியரசுக் கொடிகளைக் காட்டி, தேசிய எழுச்சிப் பாடல்களைப் பாடி எல்லோருமாகக் கூப்பாடு போட்டனர்!

செய்வதறியாத அதிகாரிகள் இராணுவத்தினரை வரவழைத்தனர்; பன்னிரண்டு மணித்தியாலங்களுக் கிடையில் தோறன் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தனர். ஆனால் இந்தத் தந்திரம் பலிக்கவில்லை. தொண்டர்கள் எச்சரிக்கையை உதாசீனம் செய்தனர். இறுதியில் தோல்வியடைந்த சிறை அதிகாரிகள் 31-12-1918ல் தோறனை அரசியற் கைதியாகக் கணிப்பதாக உறுதி மொழி கூறி ஒஸ்ரின் ஸ்ரக்குடன் உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டனர். உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதைத் தாம் மேற்பார்வையிடுவதாக டப்ளின் மாநகரக் கூட்டவை முதல்வரும் டப்ளின் நகர அத்தியட்சகருவும் வாக்குறுதியளித்தனர்.

## பொதுத் தேர்தலில் விடுதலை இயக்கத்தினருக்கு மாபெரும் வெற்றி

பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு 73 தொகுதிகளில் சின் பீன் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஒரு சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக 69 சின் பீன் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 36 பேர் சிறையில் வாடிக் கொண்டிருந்தனர்; மூவர் கட்டாய நாடு கடத்தலுக்குட்பட்டிருந்தனர்; அறுவர் ஆட்சியினரின் கண்களுக்குப் படாமல் தலைமறைவாக இருந்தனர்.

டப்ளினில் தமக்காக ஒரு பாராளுமன்றத்தை அமைக்க சின் பீன் உறுப்பினர்கள் தீர்மானித்தனர். இந்தப் பாராளுமன்றம் 21-1-1919 பிற்பகல் 3-30 மணிக்கு மன்சன் இல்லத்தில் கூடியது. அதற்கு தோள் அயரின் என்று பெயர் சூட்டப்பட்டது. தோள் அயரின் என்றால் அயர் மன்றம் என்று பொருள். இக்கூட்டத்திற்கு 27 உறுப்பினர்கள் சமூகமளித்தனர். இரகசிய அலுவல்களில் ஈடுபட்டிக் கொண்டிருந்தபடியால் மைக்கேல் கொளின்ஸும் ஹறி போலண்டும் சமூகமளிக்கவில்லை. நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக ஆயிரக்கணக்கான பொது மக்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்குக் கதல் புருகா தலைமை வகித்தார். பிரார்த்தனையுடன் இந்த முதலாவது கூட்டம் ஆரம்பமாகியது. இடைக்கால அரசாங்கத்தின் அமைப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. குடியதிபதி ஒருவர், மற்றும் நிதி, உள்நாட்டு, வெளிவிவகார, பாதுகாப்பு அமைச்சர்கள் ஆகியோரைத் தெரிவு செய்யப்படுவதற்கும் அதில் வழி வகுக்கப்பட்டிருந்தது.




சுதந்திரப் பிரகடனம் அயர், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாசிக்கப்பட்டது. எல்லோரும் எழுந்து நின்று வலது கைகளை உயர்த்திச் சம்மதம் தெரிவித்தனர். பரிஸில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேரவைக்கு ஏமன் டி வேலரா, ஆதர் கிரிபித், பிளங்கே பிரபு ஆகிய மூவரையும் அயர்நாட்டின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தனர். இரண்டு மணித்தியாலங்களுக்குப் பிற்பாடு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

## பொலீசாரிடமிருந்து வெடி மருந்துகள் பறிக்கப்பட்டன

அதே தினத்தில் திப்பரரி மாவட்டத்திலுள்ள சோளோ கெட்பெக் என்னுமிடத்தில் ஒரு வண்டியில் நிறைய வெடி மருந்துகளை ஏற்றிக்கொண்டு சென்ற பொலீஸாரைத் தொண்டர்கள் தாக்கினர்கள். காவலாக வந்த பொலீஸார் இருவரும் தலத்திலேயே சுடுபட்டு மாண்டனர். வெடி மருந்தைக் கைப்பற்றிக்கொண்டு தொண்டர்கள் ஓடலாயினர். அவர்களைத் துரத்திச் சென்ற பொலீஸார் அவர்களில் ஒருவரைக் கைது செய்தனர்.

‘கோமகன்’
‘மாமல்லன்’

## அரங்கம் 14

இங்கிலாந்திலுள்ள லிங்கன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த டி வேலரா தனது வாழ்நாட்கள் நாட்டுக்குப் பயன்படாமல் சிறைச்சாலையில் வீணாக விரயமாவதை விரும்பாமல் அங்கிருந்து தப்பிச் செல்வதைப் பற்றிச் சிந்தித்தார். அவருடைய சிறைச்சாலையின் பிரதான வாசல் கதவைத் தவிர, பக்கத்துச் சுவரிலும் ஒரு கதவு இருந்தது. இந்தக் கதவைத் திறந்தால் இரும்புப் படலையொன்று தென்படும். அதையும் தாண்டிச் சென்றால் தேகப் பயிற்சித் திடல் வரும். அங்கிருந்து தப்பிச் செல்வது மிகவும் எளிது.

சிறைச்சாலைக் கைதிகளுக்கு ஆராதனை நடத்துவதற்காக வரும் பாதிரியார் மறதியாகச் சிறைச்சாலைத் திறப்புகளைக் கண்டபடி வைத்துவிட்டுச் செல்வது வழக்கம். இதைப் பயன்படுத்தி, டி வேலரா தனது சிற்றறையின் அருகில் உள்ள சுவர்க் கதவுத் திறப்பின் பிரதிமையை மெழுகில் எடுத்தார். இவருடன் இருந்த சக கைதியான சோண் மில்றேய் ஓர் அஞ்சல் அட்டையில் இரண்டு கேலிச் சித்திரங்களை வரைந்தார். ஒன்றில் கிரிஸ்மஸ் 1915 என்று மகுடமிட்டு, மது வெறியில் தனது வீட்டின் கதவைத் திறக்க முடியாமல் ஒருவர் "நான் உள்ளே செல்ல முடியவில்லை" என்று கூறுவதாகவும் மற்றப் படத்தில், கிறிஸ்மஸ் 1918 என்று மகுடமிட்டு, கைதியொருவர் சிறைச்சாலையொன்றின் கதவைத் திறக்க முடியாமல் நின்றுகொண்டு "நான் வெளியே போக முடியவில்லை" என்று கூறுவதாகவும் இருந்தது. கைதியின் கையில் இருந்த திறப்பின் அளவு சிற்றறையின் அருகுக் கதவைத் திறப்பதற்கு உரிய திறப்பின் அளவில் இருந்தது.

## கிறிஸ்துமஸ் கேக்கும் சதி முயற்சியும்

இந்த அஞ்சல் அட்டை இரகசியமாக மைக்கேல் கொளின்ஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கொளின்ஸ் உடனேயே ஒரு திறப்பைச் செய்து அதை ஒரு கேக்குக்குள் வைத்து டி வேலராவுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் திறப்பு மிகவும் சிறிதாக இருந்தது. பெரிய திறப்பொன்று அனுப்பி வைக்குமாறு இரண்டாவது முறையாகக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி ஒரு பெரிய திறப்பும் அதே அளவாக அராவுவதற்கு ஓர் அரத்தையும் இன்னுமொரு கேக்குக்குள் வைத்து செல்வி தாள்டி என்னும் மங்கை மூலம் கொளின்ஸ் அனுப்பி வைத்தார். அவருடன் இன்னும் இரண்டு தொண்டர்களும் கூடச் சென்றனர். அவர்கள் சிறைச்சாலைக் கதவுகள் பற்றிய விபரங்களை ஆராய்ந்தனர். தப்பிச் செல்வதற்கு வழி உண்டென்று முடிவு செய்தனர்.

இரண்டாவது திறப்பும் அளவாக இருக்கவில்லை.

## சிறைச்சாலையிலிருந்து விடுதலை வீரர்கள் வெளியேறினர்

மூன்றும் முறையாக ஒரு திறப்பைத் துப்பரவாக அராவாமல் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டது. அவ்வாறே திறப்பும் அனுப்பி வைக்கப்பட்டது. திறப்பு அளவாக அராவப்பட்டுத் தயாராக இருந்தது!

இதே வேளையில் இங்கிலாந்தின் தெற்குப் பகுதியிலுள்ள அஸ்க் சிறைச்சாலையிலிருந்த கைதிகள் நால்வர், தப்பிச் செல்வதற்கு முயற்சி செய்தனர். தமக்குக் கொடுக்கப்பட்ட போர்வைகளைக் கிழித்து விறகுக் கட்டைகளை ஏணியாகக் கட்டினர். இரண்டு இரும்புக் கம்பிகளைக் கொளுக்கிகளாக வளைத்து அந்த ஏணியை அவற்றில் தொங்கவிட்டனர். இந்த ஏணியின் மூலம் நான்கு கைதிகளும் 22-1-1919ல் தப்பிச் சென்று 14 கல் தூரம் நடந்து ஆட்சியினரின் கண்களிலிருந்து தப்பினர்.

டி வேலராவைத் தப்புவிப்பதற்காக மைக்கேல் கொளின்ஸும் ஹறி போலண்டும், லிங்கன் சிறைச்சாலைக்கு வந்து அதிகாரிகளின் கண்களில் படாமல் நோட்டம் பார்த்துவிட்டுச் சென்று இறுதி ஒழுங்குகளைச் செய்தனர்.

‘சிறைச்சாலையின் பின்புறமாகத் தொண்டர்கள் வந்து வெளிச்சம் ஒன்றைக் காட்ட வேண்டும். அதைப் பார்த்ததும் கைதிகள் தாங்களும் தயார் என்பதை அறிவிப்பதற்காக நெருப்புக்குச்சி ஒன்றைத் தட்டிச் சாளரத்தின் வழியாகக் காட்ட வேண்டும். அதற்குப் பிற்பாடுதான் டி வேலராவும் அவருடன் கூட இருப்பவர்களும் அருகுக் கதவைத் திறந்து வெளியில் வரவேண்டும்’.

மைக்கேல் கொளின்ஸும் ஹறி போலண்டும் 3-2-1919 இரவு சிறைச்சாலையின் பின் பக்கத்தில் வந்து வெளிச்சம் ஒன்றைக் காட்டினர். டி வேலரா நெருப்புக் குச்சியொன்றைத் தட்டிக்காட்டினார். கொளின்ஸும் போலண்டும் சிறைக் கதவுக்கு அண்மையில் வரும் பொழுதுதான் குறுக்கே இரும்புப் படலையொன்றிருப்பதை அறிந்தனர். இப்படி ஒரு படலை இருப்பதை டி வேலராவோ கொளின்ஸோ முன்னர் அறிந்திருக்கவில்லை!

மைக்கேல் கொளின்ஸ் கைகாவலாக ஒரு திறப்பைக் கொண்டு வந்திருந்தார். அந்தத் திறப்பைப் படலைப் பூட்டுக்குள் நுழைத்தார். அளவாக இருந்தது. திறப்பை அவர் திருகினார். ஆனால் அது பூட்டுக்குள்ளேயே முறிந்துவிட்டது! ஒன்றும் செய்ய முடியாது தத்தளித்தனர்.

டி வேலராவும் அவரது சக கைதிகள் இருவருமாகச் சிற்றறையின் அருகிலிருந்த கதவைத் திறந்து கொண்டு இரும்புப் படலைக்கு எதிரே வந்தனர். அப்பொழுது, "பூட்டுக்குள் திறப்பு உடைந்துவிட்டது, தேவ்" என்று கொளின்ஸ் மெதுவாக டி வேலராவிடம் கூறினார். 'தேவ்' என்று நண்பர்களால் அன்போடு அழைக்கப்படும் டி வேலராவுக்கு மனக் கிலேசம் ஏற்பட்டது. ஆயினும் தன்னிடம் இருந்த கதவுத் திறப்பை உள் பக்கத்திலிருந்து பூட்டுக்குள் நுழைத்து மிகவும் சிரமத்துடன் தெண்டினார். உடைந்த துண்டு வெளியே சென்றது; படலையும் திறபட்டது. எல்லோருமாகச் சிறைச்சாலையின் பின்பக்கத்தைக் கடந்து சென்றனர். அப்பொழுது ஓய்வெடுத்துக்கொண்டிருந்த இராணுவத்தினர் எதிர்ப்பட்டனர். அவர்களைப் பார்த்து போலண்ட், "சேரியோ மேற்ஸ்" ("போய் வருகிறோம் தோழர்களே") என்று நையாண்டித்தனமாக வந்தனம் கூறினார். எல்லோருமாக வெளியில் நிற்பாட்டியிருந்த காரில் புறப்பட்டனர்.

(13 ம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம்

★ தப்பும் படலம்

★ குடியதிபதி டி வேலரா

★ நள்ளிரவில் கொளின்ஸ்

## விடுதலை இயக்க உறுப்பினர் உருவாக்கிய புதிய பாராளுமன்றம்

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 ஜூன் மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## ஓயாத குடியுரிமைப் பேச்சு!

மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சினை மீண்டும் சூடு பிடித்துள்ளது. திரு. நேருவும், திருமதி சிறிமாவும் சென்றவாரம் இதுபற்றிக் கடிதம் பரிமாறிக் கொண்டனர். இந்தியா "குடியுரிமைப் பேச்சுக்குத்" தயாராம். இலங்கை "சரி" என்றதும் பேச்சுத் தொடங்கப் படுமாம்.

ஒரு மாமாங்கமாக இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில் பேச்சு இன்னும் பூர்வாங்கக் கட்டத்தில் இருப்பதுதான். இரு அரசாங்கங்களின் அதிகாரிகள் பன்முறை கூடினர்—பேசினர். இரு பிரதமர்களும் சந்தித்தனர்—பேசினர். கடிதங்களும் பரிமாறிக்கொண்டனர். உடன்படிக்கையும் செய்தனர். இத்தனையும் செய்த பிறகும் மீண்டும் பூர்வாங்கப் பேச்சு நடத்தப்போகின்றனராம். இது முடிவற்ற பேச்சு — குடியுரிமைப் பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டாலும், இப்பேச்சுக்கு முடிவு ஏற்படாது போலும்!

பன்னீராண்டுகளுக்கு மேல் இழுபறிப்படும் இப் பேச்சுவார்த்தைகளில் மலையக மக்கள் என்றோ நம்பிக்கை இழந்துவிட்டனர். இப் பேச்சுவார்த்தைகள் வெறும் கண்துடைப்பு என்பது அவர்களின் கருத்து. குடியுரிமை, வாக்குரிமை, வேலையுரிமை, கல்வி உரிமை ஆகிய பிறப்புரிமைகளைப் பெற இப் பேச்சுவார்த்தைகள் பயன்படா என்பது அவர்களின் முடிவு.

பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மனிதர் கூட்டத்தின் பிரஜாவுரிமையைத் திடீரென அபகரித்த சம்பவம் உலகச் சரித்திரத்தில் வேறு எந்த நாட்டிலும் நிகழ்ந்ததில்லை. நிலத்திலே வேரூன்றி நின்ற மலையக மக்களைப் பெயர்த்து, அந்த மண்ணுக்கு உரிமையற்றவர்களாக்கியது பச்சை வகுப்புவாத நடவடிக்கையே. தமிழ் பேசும் இனத்தை அழிக்கப் பெரிய சேனநாயக்கா கையாண்ட நீண்ட காலத் திட்டங்களில் இதுவும் ஒன்று.

வட, கீழ் இலங்கையில் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கக் குடியேற்றத் திட்டங்கள் பயன்படுவதைப் போல, மலையகத்திலிருந்து தமிழ் மக்களைக் குடிபெயர்க்கப் பிரஜாவுரிமைச் சட்டம் பயன்படுகிறது.

தேர்தல்களில் வாக்கு வேட்டையாடவும் குடியுரிமைப் பிரச்சினையைப் பயன்படுத்துகின்றன சிங்களக் கட்சிகள். சிங்களப் பாமர மக்களை ஏமாற்றவேண்டிய தேவை ஏற்பட்டபோதெல்லாம், இந்தியாவுடன் நடத்தும் பேச்சுவார்த்தைக்குப் புத்துயிரூட்டுகின்றனர் ஆட்சியாளர்.

இப் பேச்சுவார்த்தைகள் வளர வளர, மலையகத் தமிழர்களின் இன்னல்களும் வளர்கின்றன. ஒருபுறம் பேச்சுவார்த்தைகள்— மறுபுறம் ஒவ்வொரு உரிமையாகப் பறிமுதல். இது ஆட்சியாளர் கையாளும் உபாயம். உழைப்பெல்லாம் உறிஞ்சிய பின், கசக்கிப் பிழிந்த சக்கையைப் போல, அவர்களைத் தோட்டங்களிலிருந்து பெயர்த்து நாளை நடுத்தெருவிலே தூக்கி எறிந்து விடுவர். இன்றைய நிலை நீடித்தால் அந்த அபாயம் அண்மிவிடுமென்பதில் ஐயமில்லை.

சிங்கள வகுப்புவாதிகள் இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும் மலையக மக்களுக்குக் குடியுரிமை வழங்க முன்வரமாட்டார்கள் என்பது திண்ணம். இலங்கை பேச்சுவார்த்தை நடத்துவது நாடற்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அடிப்படையில்தானும். எண்ணிக்கையைக் குறைப்பதெப்படி? குடியுரிமை வழங்குவதின் மூலமாகவா? அன்று—அவர்களை இந்தியர்களாக்கி, இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம்.

இதினின்று ஒரு விஷயம் தெளிவு. அதுதான் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதற்கன்று என்பது — இதில் இம்மியும் ஐயமில்லை. அவர்களுக்குக் குடியுரிமை வழங்குமாறு இலங்கையை நிர்ப்பந்திக்கவும் இந்தியாவுக்குத் திராணியில்லை — எண்ணமில்லை. எனவே இப் பேச்சுவார்த்தைகளில் மலையக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

பேச்சுவார்த்தைகள் இழுபறிப்படவும், குடியுரிமைப் பிரச்சினை குற்றுயிராகக் கிடக்கவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள் தோட்டத் தமிழர்களின் தலைவர்களெனக் கூறிக்கொண்டிருப்பவர்களே — குறிப்பாகக் காங்கிரஸ் தலைவர்களே! மலையகத் தமிழர்களின் இன்றைய அவல நிலைமைக்குப் பொறுப்பானவர்கள் அவர்களே! மலைநாட்டான் உரிமைப் போர் நடத்த முட்டுக்கட்டை போட்டவர்களும் — போடுகிறவர்களும் அவர்களே! யாழ்ப்பாண, மட்டக்களப்புத் தமிழன் தனி — மலைநாட்டுத் தமிழன் தனி, என தமிழ் பேசும் சமுதாயத்தை இரு கூறுக்கப் பாடுபடுபவர்களும் அவர்களே! தமிழ் பேசும் இனத்தைப் பிளவுபடுத்தி, சிங்கள வகுப்புவாதிகளின் இன ஒழிப்புக் கொள்கைக்கு மறைமுக ஆதரவளிப்பவர்களும் அவர்களே! தோட்டத் தமிழர் அரசியல் அறிவு பெருதவாறு தடுத்து, வெறும் பொருளாதாரப் பிரச்சினையில் மட்டும் அவர்களின் கவனத்தைத் திருப்பிவிட்டவர்களும் அவர்களே!

இக் குற்றச்சாட்டுகளை அவர்கள் நிச்சயம் மறுக்க முடியாது.

தோட்டத் தமிழர் அவர்களது தொழிற் சங்கங்களில் உறுப்பினராயிருக்கின்றனரென்பது உண்மையே! ஆனல் அரசியல் உரிமைகளைப் பெற அவர்களின் தலைமை உபயோகமற்றது என்பதை இன்று தெளிவாக உணர்ந்துள்ளனர்.

அரசியல் உரிமைகளைப் பெற மலையக மக்கள் சொந்த பலத்தையே நம்பியுள்ளனர். அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கின்றனர் வட கீழ் மாகாண மக்கள். அவர்களுக்கு வழி காட்டத் தயாராயிருக்கிறது தமிழரசு இயக்கத் தலைமை.

மலையக மக்களுக்கும் வட, கீழ் மாகாண மக்களுக்குமிடையே அமைக்கப்பட்டுள்ள பாலம்தான் இலங்கைத் தொழிலாளர் கழகம், மலையகத் தமிழ் மக்களின் பொருளாதார, அரசியல் உரிமைப் போராட்டத்திலே கழகம் முன்னணி தாங்கும் அதன் துரித வளர்ச்சியே அதற்குச் சான்று.

இந்த நிலையில் உரிமைகளைப் பெறத் தீர்க்கமான நடவடிக்கையில் இறங்குவதைத் தவிர வேறு வழி கிடையாது தோட்ட மக்களுக்கு. திரு. நேரு உதவி செய்தால் செய்யட்டும். இல்லையேல் எல்லைப் போரைக் கவனிக்கட்டும்! மலையக மக்கள் ஒரே மனிதனைப் போல ஒரு பத்து நாட்களுக்கு மட்டும் கையைக் கட்டிக் கொண்டு, 'லேன்' அறைகளிலே ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். குடியுரிமை, வாக்குரிமை, கல்வி யுரிமை, வேலையுரிமை எல்லாம் அவர்கள் காலடியிலே வந்து விழும். இதில் ஐயம் வேண்டாம்!

உள்ளூராட்சித் தேர்வு முடிவுகள்

# ஆளும் கட்சிக்கு அருமையான பாடம்

## சமசமாஜிகளுக்கும் ஒரு சவால்!

'தொடர்ந்து 25 வருடங்களுக்கு ஆட்சி செலுத்துவோம்' என்று ஆளும்கட்சியினர் கிராமம் கிராமமாக மார்தட்டிக் கூறுகின்றனர். ஆனல் நடைபெற்று வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலே ஆளும் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் தோல்வி அடைந்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து வெற்றியீட்டி வருகிறது. இவற்றுக்கான காரணங்கள் என்ன?

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டிலே தேனும் பாலும் பெருக்கெடுத்தோட வழி வகுப்போம் என்றும், சமதர்மப் பாதையில் சென்ற காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கனவை நனவாக்குவோம் என்றும் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இந்நாட்டு மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையே தொடர்ந்து சம்பாதித்து வருகின்றனர்.

நாட்டில் உணவுப் பொருட்களுக்குப் பஞ்சம் ஏற்படுவதும், அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்களுக்கு விலையேற்றம் ஏற்பட்டதும்தான் கண்டமிச்சம்.

தனிப்பட்ட முதலாளிகளிடம் சிறப்புற்றிருந்த பல தொழில்களை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தும், சீரான நிர்வாகம் இல்லாததன் காரணமாக வருமானம் குன்றியதுடன் தொழில்களும் பாதிக்கப்பட்டதுதான் கண்டு கொண்டபலன்.

மொழிக்கொள்கை என்றுகூறிக்கொண்டு இதுகாலவரை இருந்து வந்த சௌஜன்ய உறவுகளை உதறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுதான் கிடைத்துள்ள முடிவு.

நாட்டில் நாளாந்தம் பெருகிவரும் வறுமைப்பிணியையும், வருவாய் குறைவையும், வளமின்மையையும் போக்குவதற்காக கிஞ்சிற்றேனும் சிரத்தை காண்பிக்கப்படவில்லை. நாட்டின் வளத்துக்காக 'தியாகம் செய்யுங்கள், தொண்டு செய்யுங்கள்' என்று வானளாவ வேண்டுகோள் விடுக்கும் இந்நாட்டு ஆளவந்தார்கள், தங்கள் சொந்த வாழ்க்கை வளத்தைப் பெருக்கிய அளவுக்கு மக்கள் வளத்தைப் பெருக்க வாய்ப்புக்கள் எதுவும் செய்யவில்லை.

### சமசமாஜிகளின் சந்தர்ப்பவாதம்

சமதர்மம் பேசிவரும் சமசமாஜிகளும் எட்டியாந்தோட்டை பட்டின சபையில் தங்கள் குட்டுகள் வெளிப்பட்டுவிட்டதை உணர்ந்துகொண்டனர். இதுவரைகால சமசமாஜக் கட்சியினரின் கோட்டையாக இருந்துவந்த எட்டியாந்தோட்டை, இன்று யூ. என். பி. கோட்டை கட்ட இடம் கொடுத்துவிட்டது.

எட்டியாந்தோட்டை மக்களின் மனமாற்றத்துக்குக் காரணம் சமசமாஜக் கட்சித் தலைவர்களிடம் ஏற்பட்ட தடுமாற்றமே என்று வர்ணிக்கப்படுகிறது பெயரளவுக்குத் தமிழ் உரிமைக்காகப் பாடுபடுபவர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள் சமசமாஜத் தலைவர்கள் என்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள் என்று கருதப்படுகிறது.

### காரணம் என்ன ?

எட்டியாந்தோட்டைப் பாடசாலைகளின் தரப் பிரிவின் போது இத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் என். எம். பெரேரா தமிழ் பேசும் மாணவர்களுக்குரிய உரிமைகளில் பாதிப்பு ஏற்படும் வகையில் நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டு வெகுவாகப் பரவியிருந்தது. மேலதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமான எட்டியாந்தோட்டையின் பிரதிநிதி, நடுவு நிலைமையிலிருந்து வழுவினுரா? என்பதை எட்டியாந்தோட்டை வாக்காளப் பெருமக்கள் ஆராயத் தலைப்பட்டதன் விளைவுதான், சமசமாஜக் கட்சியின் தோல்விக்குக் காரணமாகவிருக்கலாம் என்று பலமான வதந்திகள் பரவியுள்ளன.

### நாம் கண்ட முடிவு

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில், இந்த நாட்டின் ஆட்சி பீடத்துக்கு எந்தக் கட்சி வந்தாலும், மொழி வழி, மாகாண ஆட்சிப் பொறுப்பற்ற பட்சத்தில் எதுவிதமான நன்மையும், எந்தக் காலத்திலும் நிரந்தரமாகக் கிடைக்கப் போவதில்லை. இந்த உண்மையை அறிந்தே தொடர்ந்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து அனுப்பப்படுகின்றனா. சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கமைவாக ஒழுகும் எந்தக் கட்சியும் எந்த நிலையிலும், தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைக் கொடுக்கவோ, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ எள்ளளவும் உடந்தையாக இருக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

## உண்மைதானு?

இதுவரை காலமும் நடைபெற்று வந்த ஆசிரியர்களுக்கான இடமாற்ற முறைகளில் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக புள்ளிகளின் அடிப்படையில் இடமாற்றம் செய்யும் முறை புகுத்தப்பட்டது. இந்தப் புள்ளி விபர அடிப்படை மாற்றங்களின்படி ஏறத்தாழ 250 ஆசிரியர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளி மாகாணங்களில் கடமை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டக் கல்வி இலாகாவிலுள்ள ஒரு பெரிய 'புள்ளி'யின் தயவைப் பல ஆசிரியர்கள் நாடியதன் காரணமாக, மாற்றம் செய்யப்படுபவர்களின் தொகை மெல்ல மெல்ல அருகி வருவதாகத் தெரிகிறது. ஆசிரியர் சங்கங்களின் தலையீடே இதற்குக் காரணம் என்று இந்தப் பெரிய 'புள்ளி' அடிக்கடி பழியை வேறு பக்கம் திருப்புகிருராம். இது உண்மைதானு என்பது விரைவில் வெட்ட வெளிச்சமாகலாம்.

## சிங்களச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழியக்கத்துக்கு உறுதுணையாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களும், தமிழ் பேசும் பொது மக்களும் இருக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

நீதிக்கும், தர்மத்துக்கும் முரணுனதான மொழிச் சட்டத்தின் துணை கொண்டு தமிழ் ஒழிப்பும், தமிழ் பேசும் இன ஒழிப்பும் நிறைவேறச் செயலாற்றும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு இடங் கொடுக்காது, சிங்களம் படிக்காது எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்றும் அரசாங்க ஊழியர்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தலைவரின் தலைமை உரையும் ஏனைய விபரங்களும் அடுத்த வாரம் வெளிவரும்.

## புதிய தொழிற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிய வருகிறது. இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்டு வந்த தமிழ் பேசும் துறைமுகத் தொழிலாளர் பிரச்சினைகளை இந்தத் தொழிற் சங்கம் தீர்த்து வைக்க முயன்று வருகிறது. பின் வருவோர் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ஞா. அ. பர்ணுந்து, துணைத் தலைவர்: திரு. அ. செபஸ்தியாம் பிள்ளை, செயலாளர்: திரு. செ. ஜோ. பிரிட்டோ, துணைச் செயலாளர்: திரு. சு. நாகலிங்கம், பொருளாளர்: திரு. க. அருணசலம், துணைப் பொருளாளர்: திரு. அ. செல்லமாணிக்கம், கணக்காய்வாளர்: திரு. கு. செல்வவிநயகம்.

மொழி வழி பிரிந்து அமைக்கப்பட்ட 'அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்' 'அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம்', ஆகிய சங்கங்களுடன் துறைமுகநாவாய் இயக்குனர் கழகமும் தமிழ் பேசும் தொழிலாளர்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன.

மலையகத்தில் நிறுவப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகமும் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருவதாக மலையகத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

# அனாதைகளின் பணத்தை அபகரிக்கலாகாது

## வீரகேசரிச் செய்திக்கு நீச்சல் வீரர்கள் மறுப்பு

### உண்மையில் நடந்தது என்ன?

கடந்த வாரம் களனி கங்கையில் நடைபெற்ற சலனநீர் நீந்தல் பரிசோதனை பற்றிய செய்தியை வெளியிட்ட வீரகேசரிப் பத்திரிகை இல்லாதனவற்றையும் பொல்லாதனவற்றையும் பொறிந்து செய்தியைத் திரித்து புதிய ரூபத்தில் வெளியிட்டிருக்கிறது என்பதை அந்த நீச்சலில் கலந்து கொண்ட திரு. டி. எஸ். ஹந்தபான்கொட, திரு. இரா. கு. இராமானந்தன் திருவாட்டி அஸ்லின் கணவர் திரு. டயசும் விடுத்துள்ள அறிக்கைகள் நிரூபிக்கின்றன.

திருவாட்டி அஸ்லின் டயஸின் கணவரும், நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்தவருமான திரு. பி. எல். எவ். டயஸ் நமது நிருபரிடம் இதுபற்றிக் கூறியதாவது:- "நானும் ஆனந்தனின் தந்தையாரும் நீச்சல் வீரர்களை அவதானித்துக் கொண்டு ஒரே வள்ளத்திலேயே சென்றோம். எனது மனைவி, திரு. ஆனந்தன், திரு.வேலுப்பிள்ளை என்னும் மூவரும் மிகவும் ஆறுதலாகவும் அமைதியாகவும் நீந்தி வந்தார்கள். ஏனையவர்கள் நீச்சல் ஆரம்பமாகிய சில மணி நேரத்திலேயே இவர்களை விட்டுப்பிரிந்து முன்னே வேகமாக நீந்திச் சென்று விட்டார்கள். ஆனால் நீச்சலின்போது எந்த நேரத்திலும் எனது மனைவியை யாரும் தள்ளி உதவி செய்தது கிடையாது. எனது மனைவியைத் திரு. ஆனந்தன் 14 மைல் தூரம் தள்ளிவந்து உதவியதாக ஏதோவொரு தமிழ்ப் பத்திரிகையில் செய்தி வந்ததாக அறிகிறேன். அது முற்றிலும் தவறானது. எனது மனைவி ஆனந்தனுக்கு முன்னதாகக் கரையை அடைந்து விட்டார். இப்படி இருக்கையில் எனது மனைவிக்கு ஆனந்தன் உதவியதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? அது முற்றிலும் பொய்யான செய்தியாகும்".

#### ஹந்தபான்கொடாவின் அறிக்கை

திரு. ஹந்தபான்கொட நமது நிருபரிடம் கூறியதாவது:-

"ஒருவரை 14 மைல்தூரம் தண்ணீரில் இழுத்து வருவது நடக்கமுடியாத ஒன்று. அப்படி இருக்கையில் ஒரு பத்திரிகை இப்படிச் செய்தி வெளியிட்டதன்மூலம் நீர் விளையாட்டுத் துறையில் தனது அறியாமையை வெளிக்காட்டியுள்ளது.

திரு. ஆனந்தன் சிறந்த நீச்சல் வீரர்களில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. அவரது நீச்சல்முறைக்கும் மற்றவர்களின் நீச்சல் முறைக்கும் வேறுபாடு உண்டு. அவருடைய முறை நீண்டதூரத்தைக் களைப்பின்றி நீந்துவதற்கு உதவியானது, ஆனால் அம்முறையில் விரைவாக நீந்த முடியாது",

#### 'மெதுவாக நீந்தினார்'

மற்றொரு நீச்சல் வீரரான திரு. இரா. கு. இராமானந்தன் நமது நிருபரிடம் தெரிவித்ததாவது:-

"திரு. ஆனந்தனுடன் சில மைல் தூரத்திற்கு நானும் ஆறுதலாக நீந்திச் சென்றேன். அப்பொழுது திரு. ஆனந்தனை விரைவாக நீந்தி வரும்படி கூறினேன். அவர் பாக்கு நீரிணையை இதே முறையிலேயே நீந்திக் கடந்ததாகக் கூறவே, நான் அவரைவிட்டு வேகமாகமுன்னேற வேண்டிய நிலைக்குள்ளானேன். நான் ஆனந்தனுடன் சென்ற தூரம் வரை அவர் திருவாட்டி அஸ்லின் டயஸிற்கு எந்தவித உதவியும் செய்யவில்லை. வீரகேசரியின் கூற்று முற்றிலும் தவறானது.

மூன்றாவதாகக் கரையை அடைந்தவர் திரு. டி. டி. பிரான்சிஸ் என்று வீரகேசரி குறிப்பிட்டிருக்கிறது. அப்படி ஒருவர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை. மூன்றாவதாகக் கரையை அடைந்தது நானேயாகும். எனது பெயரைப் பிரஸ்தாபிக்கவில்லை என்பதற்காக நான் வீரகேசரி மீது குற்றம் சுமத்தவில்லை. நடக்காத நிகழ்ச்சிகளைப் பிரசுரித்து தனது அறியாமையை வீரகேசரி காட்டிக்கொண்டமைக்கு வீரகேசரிமீது அனுதாபப்படுகிறேன்.

திரு. ஆனந்தன் கையாண்ட நீச்சல் முறைக்கும் நான் கையாண்ட நீச்சல் முறைகளுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. திரு. ஆனந்தன் "தவளை நீச்சலுக்கும்" "நாய் நீச்சலுக்கும்" இடைப்பட்ட ஒரு முறையைக் கையாளுகிறார். எனவே தான் அவரால் வேகமாக நீந்த முடியவில்லை".

#### கயிறு திரித்தல்

அரசியல் செய்திகளைக் கயிறு திரித்து முன்னுக்குப் பின் முரணாக அமைத்துச் செய்திகளை வெளியிடும் கலையில் வீரகேசரி கை தேர்ந்து விளங்கி வருவது அறிந்ததே. இப்பொழுது விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் தங்கள் கயிறு திரிக்கும் கோணங்கித்தனத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது வீரகேசரி.

'களனியில் ஆழிக்குமரனின் மற்றுமோர் சாதனை' என்று மகுடமிட்டு 17-ம் திகதி வீரகேசரிப் பத்திரிகையில் வெளி வந்த செய்தியில் பல பொய்யுரைகளும் புனைந்துரைகளையும் பொதியப்பட்டுள்ளன. சிறு பிள்ளைகளும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் செய்தி முன்னுக்குப் பின் முரணாக அமைந்திருக்கிறது.

'இரவு 7-20 மணியாகியும் ஆனந்தனையும் திருமதி அஸ்லின் டயஸையும் காணாத மக்கள் இடத்தை விட்டு நகரவில்லை' என்று முன்னுக்குக் குறிப்பிட்டு விட்டு, அதற்குக் கீழே அப்பத்திரிகை குறிப்பிடுகிறது, 'அந்நேரத்தில் ஆனந்தன் ஒரு வீரச் செயலைப் புரிந்து கொண்டு கண்ணுக்கெட்டிய தூரத்தில் வருவது தெரிந்தது' என்று.

இரவு மணி 7-20-க்கு மேல் வேண்டியளவு ஒளி வசதிகள் செய்யப்படாத விடத்தில் வீரச் செயல் புரிந்து கொண்டு வருவது எப்படித் தெரிந்திருக்க முடியும்? தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சிந்திக்கும் திறன் அற்றவர்கள் என்று வீரகேசரி எண்ணுகிறதா? அல்லாவிடின் தனது அறியாமையையும் செய்தித் திரிப்பையும் காட்டுகிறதா?

அடுத்து ஜனாப் ரிஸ்வி செயன் என்ற ஒரேயொரு முஸ்லிம் இளைஞரே இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்று குறிப்பிட்டிருக்கிறது வீரகேசரி. எதற்காக இதிலும் இருட்டடிப்பு? ஏன் அந்தச் சிறுபான்மை வகுப்பினராகிய முஸ்லிம்கள் மீது இத்தனை வெறுப்பு வீரகேசரிக்கு? ஜனாப் பக்கமன் என்ற முஸ்லிம் அன்பர் ஜனாப் செயினின் உறவினர். இவரும் முழுத் தூரத்தையும் நீந்தி நாலாவதாகக் கரை வந்து சேர்ந்தவரே. இவர் அவர்களின் கண்ணில் படவில்லைப்போலும்.

#### பொய் மூட்டை

அடுத்து ஆனந்தனின் தாமதத்திற்கு காரணம் கற்பிக்கும் நோக்கத்துடன் ஒரு பொய் மூட்டையையே அவிழ்த்து விட்டு, ஆனந்தனுக்கு நீங்காத வடுவைத் தேடியதுடன் தமிழ் பேசும் மக்கள் மீது சிங்கள மக்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்படக் கூடிய முறையில் நடந்துள்ளது இப் பத்திரிகை.

மூன்றாவதாகக் கரையை அடைந்தார் ஒரு தமிழர். முகத்துவாரம் 'மின்வால் நீச்சல் கழகத்தைச்' சேர்ந்தவரும், நில அளவைத் திணைக் களக நீச்சல் குழுச் செயலாளரும் 21 வயது நிரம்பப் பெறுதலருமான இளைஞர் திரு. ஆர் கே. இராமானந்தன் மூன்றாவதாகக் கரையை அடைந்தார். இவரைப் பற்றி வீரகேசரி எதுவுமே குறிப்பிடவில்லை. ஏன் இந்தத் துரோக முயற்சி?

உண்மை இப்படி இருக்க எதற்காக வீரகேசரி தரங்குறைந்த முறையில் செய்தித் திரிப்பு நடாத்துகிறது? அரசியல் செய்திகளைத் திரித்து எழுதிப் பழகியதின் தோஷம், பொது நிகழ்ச்சிகளையும் திரிக்காமல் எழுத முடியவில்லைப் போலும்!



திரு. இரா. கு. இராமானந்தன்

## தர்மப் பணம் நிறுத்தப்பட்டதுபற்றி திரு. இராசமாணிக்கம்

அனாதைகளுக்கும், வருமானத்துக்காக உழைக்க முடியாதிருக்கும் அங்கவீனர்களுக்கும், வயோதிபர்களுக்கும் வழங்கப்பட்டுவந்த தர்மப் பணம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால், அம்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விலைவாசிகள் உயர்ந்துள்ள இவ்வேளையில் அனாதைகளுக்குக் கொடுக்கும் அப் பணத் தொகையை அபகரிப்பதன் மூலம் ஏழைகளுக்கு அநீதி செய்வது முறையாகாது.

இவ்வாறு பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும், தொழில், சமூக சேவை அமைச்சரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சமூக சேவைக்காக ஒதுக்கப்படும் பணத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை மீதப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் சமூக சேவைப் பகுதியைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்தே மட்டக்களப்புப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த தர்மப் பண உதவி வெட்டப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

நிதி நெருக்கடி எந்தக் கட்டத்தில் இருந்த போதிலும் ஏழை மக்களுக்கும், அனாதைகளுக்கும், அங்கவீனர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்த உதவியைத் திடீரென நிறுத்துவது அநீதியாகும் என்று நமது நிருபரிடம் திரு. இராசமாணிக்கம் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதா மாதம் சுமார் 3600 பேர் தர்மப் பணம் பெறுகின்றனர். இவர்களில் சுமார் 800 பேருக்கு கடந்த மாதத்திலிருந்து தர்மப் பணம் கொடுபடாது நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சமூக சேவா மந்திரியைப் பேட்டி கண்டு, நிறுத்தப்பட்ட தர்மப் பணத்தை உடனடியாகக் கொடுக்கும்படி திரு. இராசமாணிக்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வனுந்தரப்...

(6-ம பக்கத் தொடர்ச்சி)

எழும் மக்கள் கிளர்ச்சிக்கேற்ப சிற்சில விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்க்கப்படுகின்றன வென்றும் அவை அனைத்தும் பொய்யாகி விடுகின்றன வென்றும், எனவே அடுத்து வரும் சிம்மாசனப் பிரசங்கமும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாதென்றும் "மகஜன எக்ஸத் பெரமுன" என்னும் மக்கள் ஐக்கிய முன்னணியின் சிங்கள வாரப் பத்திரிகை (16—6—63) கூறுகிறது.

(வளரும்)


### யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

விபரங்களுக்கு: புரொக்டர் டி. சேனாதிராஜா, மானிப்பாய்.

அல்லது

புரொக்டர் எஸ். ஜி. உவட்சன், 469, காலி வீதி, கொழும்பு-3.



உங்கள் பிரச்சினைகள் எதுவாய் இருப்பினும் சரி, எங்களுக்கு, உடன் எழுதுங்கள். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும் விபரங்கள் அடங்கிய விபரப் பட்டியல் ஒன்று இனமாக அனுப்பி வைக்கப்படும்.

விபரங்களுக்கு:

பி. எம். திசாநாயக்க கம்பனி.


### திருமண அழைப்பு

**சம்பந்தமூர்த்தி — இந்துமதி**

கல்குடா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. மாணிக்கவாசகர், திருமதி மாணிக்கவாசகர் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி இந்துமதி அவர்களுக்கும்

பங்குடாவெளி திரு. பெ. சின்னத்தம்பி, திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் புத்திரன் திருநிறை செல்வன் சம்பந்தமூர்த்தி (வவுனிக் குளம் குடியேற்ற அதிகாரி) அவர்களுக்கும்

நிகழும் சோபகிருது வருடம் ஆனி மாதம் 14ம் நாள் (28—6—63) வெள்ளிக்கிழமை முற்பகல் 11-59 மணிக்கும் பகல் 1-15 மணிக்கும் இடையில் வரும் கன்னி இலக்கின சுபமுகூர்த்தத்தில், மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.


உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

குறிப்பு : தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை

திரு. பெ. சின்னத்தம்பியும் பாரியாரும்
பங்குடாவெளி.

திரு. பொ. மாணிக்கவாசகரும் பாரியாரும்
செங்கலடி.


### விகார்பிலஸ்



விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
5. என். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.

கதிர்பதினைந்து தொடர் கதை

# 'ஒன்று கேட்பேன்'




வான நெடுந்திரையைக் கிழித்துக்கொண்டு பாய்வது போல, மா மரத்தின் அடர்கிளையினுள் இருந்த குயில் ஒன்று, 'விர்' ரென்று மேலே எழுந்து, ஆகாயத்தில் வட்டமிட்டுத் திரும்பவும் மா மரத்தின் உச்சாணிக் கிளையொன்றில் வந்து அமர்கிறது. அதனுடைய ஊனை உருக்கிக் கொண்டு, கண்டத்திலிருந்து புறப்பட்ட நாதம், பாலாவின் வீட்டு வெளித் திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த ராஜகோபாலினதும் பாலாவினதும் காதுகளில் எதிரொலிக்கவே செய்கின்றது.

'எவ்வளவு இனிமையான குரல்...' என்கிறான், பாலா.

'சோகத்தில் இருந்து பிறக்கின்ற கலைகளெல்லாம் இனிமையாகத்தான் இருக்கும்..!'

மா மரத்தின் கிளைகளினூடே எதையோ ராஜகோபாலின் விழிகள் தேடுகின்றன.

'சோகத்திலா இக்குயில் பாடுது?...'

'இணையைப் பிரிந்த வேதனை அதற்கு! குரலை விட்டு விட்டு, குரலிலே ஒரு துடிப்பு நிறையத் தன் இணையை நினைத்து வருந்துகிறது அது...!'

பாலா, அவனை ஒரு விதமாகப் பார்க்கிறான். ராஜகோபாலின் விழிகள் மாமரத்தின் படர்ந்த கிளைகளினுள் சிக்கியிருக்கின்றன.

'அவரவர் மன நிலையைப் பொறுத்துத்தான் வெளி நிலை அமைகிறது, ராஜ்! ஒருவன் ரோட்டில் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான்! அதைக் கண்ட ஒரு குடிகாரன் எண்ணினான், அவனுக்கு நல்ல வெறி என்று! ஒரு பைத்தியம் எண்ணியது, அவனுக்கு விசர் என்று! ஒரு வருத்தக்காரன் எண்ணினான், அவனுக்கு வருத்தம் என! அப்படித்தான் இருக்கிறது, இதுவும்! எண்ணத் தூண்டுவது ஒரு செயலாக இருந்தாலும், அவரவர் மன நிலையைப் பொறுத்தே எண்ணம் உருப் பெறுகிறது!...'

ராஜகோபாலின் விழிகள் திரும்பிப் பாலாவைப் பார்க்கின்றன. அவ்விழிகள் கலங்கி விடுவன போலத் தவிக்கின்றன.

பாலா துடித்துப் போகின்றான்:

'டேய், டேய்...நான் உன் மனதைக்குழப்பிவிட்டேனா?'

'சீச்சி, அப்படியில்லை......! என்ரை மனம் எப்பவோ குழம்பிப் போட்டுது! நீ உண்மையைத்தானே சொன்னனீ...?'

நிமிஷங்களுக்குச் சிறகுகள் இருக்கின்றன.

'பாலா! நிலைகுலைந்துபோய் அவள் சுவரோடை விழுந்து கிடந்ததை என்னால் மறக்க முடியாதிருக்கிறதடா! அவள் நெற்றியிலிருந்து பீறிட்ட ரத்தம் என் சித்தத்தைச் சிதற அடித்திடும்போலிருக்கு...!'

'ராஜ்...!'

'அவளை ஓடிப் போய்த் தூக்கி அணைத்து, இரத்தத்தைத் துடைத்து, கண்ணீரைச் சுண்டிவிடத் துணிவற்று நான் மரமாக நின்றிருந்தேனே...?'

'ராஜ்...மெதுவாகப் பேசு!'

ராஜகோபாலின் கண்கள் கலங்கி ஒளிர்கின்றன. உதடுகள் அவனையறியாமல் நடுங்குகின்றன.

'பாலா, பாலா! நான் என்னடா செய்வேன்! என்னை நம்பியவளுக்கு நான் என்னடா செய்வேன்!...அவளை அந்தக் குடிகாரன் அடித்து நொறுக்கிவிட்டானே? இனி அவளைச் சந்திக்கவும் முடியாது! ஆறுதல் கூறவும் முடியாது!...நானேன் இனி இருப்பான்...'

பாலா அந்த நிலையிலும் சிரிக்கிறான். வேதனை நிறைந்து தளும்புகிறது:

'சின்னக் குழந்தை போல அழுகிறியே? நடந்தது நடந்து விட்டுது...! நீ கவனமாகப் படி முதலில்! படித்து ஏதாவது வேலை எடுத்திட்டியெண்டால், பேந்து புவனத்தை எப்படியாவது கட்டிக்கொள்ளலாம்...'

'வேலை எடுத்திட்டால் புவனத்தைச் சுலபமாகக் கட்டிக்கொள்ள முடியுமாடா?..'

ராஜகோபாலின் கேள்விக் குரலில் தொனித்த ஒருவித ஆர்வம் பாலாவைத் தவிக்க வைக்கிறது.

'ஓம்...நிச்சயமாக முடியும்! ஒருத்தியை வைத்துக் காப்பாற்றக் கூடிய துணிவும், வழியும் இருந்தால் ஆருக்குப் பயப்பட வேணும்? நீ முதலில் படி...'

ராஜகோபால் சிறிது மௌன நிஷ்டையில் ஆழ்கிறான்.

செங்கை ஆழியான்

'பாலா!...'

'என்ன, ராஜ்...?'

'என்னால் இனிப் படிக்க முடியாது!...'

'என்னடா...?'

ராஜகோபாலின் குரல் அமைதியாக ஒலிக்கிறது:



'என்னால் இனிப் படிக்க முடியாது, பாலா! நான் இப்போதே ஏதாவது வேலை தேடிக் கொள்ளப் போகிறேன்...!'

ராஜகோபாலின் மன நிலையை அவனால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

'ராஜ்! நீ அவசரப்படுகிறாய்! படித்து ஒரு பட்டதாரியானால் எவ்வளவு மதிப்பு?'

'அதுவரை என்னால் காத்திருக்க முடியாது, பாலா! முதலில் இந்த யாழ்ப்பாணத்தை விட்டே எங்காவது போக வேணும்...!'

'யாழ்ப்பாணத்தின் மீது இவ்வளவு ஆத்திரமா?'

ராஜா மௌனமாக இருக்கிறான்; பாலா தொடர்கிறான்:

'நீ நினைப்பது போல உத்தியோகம் எடுப்பது என்பது அவ்வளவு ஒன்றும் சுலபமான காரியமல்ல...! இந்த அரசாங்கத்திலை அது மிகவும் கஷ்டம்...!'

'முயன்று பார்ப்போம்... பாலா!'

குயிலின் குரல், மா மரக் கிளையொன்றில் இருந்து திரும்பவும் விரைந்து வருகிறது. இருவரும் பேசாது இருக்கிறார்கள். மௌனத்தைப் பாலா கிழிக்கிறான்:

'இதற்கு உன் அண்ணன் ஒத்துக் கொள்வானா? உன் ஆச்சி ஒப்புக்கொள்வாரா?..'

'முதலிலை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்தான்! ஆனால் வற்புறுத்தினால் நிச்சயமாக ஒத்துக் கொள்ளுவினம்! அண்ணனுக்கு என் செய்கைகள் பிடிக்கவில்லை! சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மனதுக்குள்ளை வைத்துக் குமுறுகிறார்! யாழ்ப்பாணத்தை விட்டு எங்காவது நான் போவதை அவர் நிச்சயமாக விரும்புவார்!...'

'அப்படியானால் நீ வேலை தேடுவதென்றே முடிவுசெய்திட்டியா?....'

ராஜா வேதனையோடு தலையை ஆட்டுகிறான்: 'நீ படித்து நலலா முன்னுக்கு வரவேணும், பாலா! உன் எண்ணங்கள் எல்லாம் நிறைவேற வேணும்...!'

பாலா வேதனையோடு நகைக்கிறான்:

'என் எண்ணங்கள் நிறைவேறுமென நீ நம்புகிறாயா?'

'நிச்சயமாக நம்புகிறேன், பாலா! நீ படித்துப் பட்டதாரியாவாய்! அது மட்டுமல்ல நீ விரும்பியவள் நிச்சயமாக உனக்குக் கிடைப்பாள்...!'

'ராஜ்...?'

'அதிர்ஷ்டமிருந்து, எனக்கு வேலையும் கிடைத்து நான் எங்காவது போவதற்கு முன், சரசுவிடம் உன்னைப் பற்றிக் கூறி முடிவு சொல்லிச் செல்வேன்...!'

இவற்றைக் கூறும்போது ராஜகோபாலின் உள் இதயம் ஓலமிடுகிறது: 'தரகு வேலை செய்யப்போகிறாயா?'

'தரகு?'

கனகத்திற்கும், சின்னராசுவிற்கும் தன்னையறியாமலேயே தரகு வேலை செய்ய நேர்ந்தது, அவன் மனத்திரையில் தோன்றுகிறது. அறியாமல் செய்த தவறு அது.

'அபப்டியானால் இது அறிந்தும் செய்யும் தவறு?'

இது தவறில்லை! ஒரு கிட்ட நண்பனுக்குச் செய்யும் உதவி!'

'எனக்காக நீ கஷ்டப்பட வேண்டாம் ராஜ்! நான் சரசுவை மறக்க முயல்கின்றேன்!

'நீ ஒரு கோழை!...'

'நீ இப்ப அனுபவிக்கின்றவை எல்லாம் வீரத்தின் செயல்களா?'

ராஜாவிற்கு வாயடைத்துப் போகிறது!

'பாலா! உண்மையைக் கூறு...நீ சரசுவை உண்மையாக விரும்புகிறாயா?...'

மௌனம்!

அவன் சிரிக்கிறான்:

'நான் வர்ரேன், பாலா!...

வீடு செல்ல எழுகிறான் ராஜகோபால். ஏதோ நினைவு வந்தவனைப் போல பாலாவை நோக்கித்திரும்புகிறான்:

'உன் அப்பா கண்டியிலை அல்லவா படிப்பிக்கிறார்?'

'ஓம்...ஒரு தோட்டப் பள்ளியிலை...!'

'அப்படியானால், அங்கினேக்கை ஏதாவது தோட்டப் பள்ளிக் கூடங்களிலை எனக்கு ஏதாவது வேலை எடுத்துத் தரும்படி கேட்கிறாயா?...'

'ஓ...நிச்சயமாக...! அப்பாவிற்கு இண்டைக்கு கடிதம் போடுறேன்!..அங்கினேக்கை சுலபமாக எடுக்கலாம் என்று நினைக்கிறேன்...! என்றாலும், ராஜ்...''

'நான் முடிவு செய்துட்டன், பாலா...'

* * *

நாவலர் வீதியில் கால்களைப் பதித்து நடந்து கொண்டிருக்கிறான், ராஜகோபால். மேற்கே சரியும் சூரியனின் ஒளிக்கதிர்கள் அவனுக்கு முன்னால், அவன் நிழலை நீள வைக்கின்றன.

அவன் நடந்து கொண்டிருக்கிறான். ஆனால், அவன் மனம் எங்கெங்கோ தேன் சிட்டாகப் பறந்து கொண்டிருக்கிறது.

புவனம் என்ற மலரைச் சுற்றித் தேன் சிட்டுப் பறக்கிறது.

'புவனம், நீ எப்படி இருக்கிறாய்? நெற்றியில் பட்ட அடி எப்படி வலியைத் தருகுதோ? உன்னால் எப்படிக் குஞ்சு, அதைத் தாங்க முடியும்?...'

தேன் சிட்டு இறகுகளைக் குவித்து மேலெழும்பி பாலாவை நோக்கிப் பறக்கிறது:

'நீ புவனத்தைக் கைவிடமாட்டாய் என்று நம்புகிறேன் ராஜ்! ஆனால், இந்தக் காதல் இருக்கிறதே, அது மிகப் பொல்லாதது! நான் கைவிடமாட்டேன் என்றுதான் உண்மைக் காதலன் எப்போதும் நம்புகிறான்! ஆனால், கடைசியிலை ஏதேதோவெல்லாம் நிகழ்ந்து முடிந்து விடுகிறது! காதலியின் கழுத்தில் தாலி கட்டிய பின்தான் காதல் நிறைவேறியது என்று கூறமுடியும்! தாலி கட்டும் அந்தக் கடைசி நேரத்திலைகூட எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்து தடையாகிவிடலாம்...!' என்கிறான் பாலா.

'இதான் அநுபவமா?'

'என் அனுபவங்களல்ல! மற்றவர்களுடைய அனுபவங்களும் என் அனுபவங்களாகின்றன...!'

'இத்தகைய மனப் போக்குடைய நீ, எப்படியடா சரசுவிடம் மனதைப் பறிகொடுத்தாய்...?' என்று வினவுகிறான் ராஜா.

'உண்மையிலை, ராஜ்! அதுதான் எனக்கு இன்னமும் புரியவில்லை! என்னிதயத்தின் ஒரு மூலையில் இருந்து 'சரசு, சரசு' என்று ஒரு குரல் ஓயாது எழுந்து கொண்டேயிருக்கிறது! நான் நினைக்கிறேன், காதல் என்பதை ஒவ்வொருவரும் அனுபவத்திலேயே உணர வேண்டும்

(13-ம் பக்கம் பார்க்க)


## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சிவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
**34, செட்டியார் தெரு,**
கொழும்பு-11.

சிறு கதை

# கல் பேசுகிறது!



ராமா ராஜகோபால்

பல்லிய மேனியின் மோகனமும், அழகும் புலப்பட்ட அந்த நங்கையை மிகவும் அற்புதமாகக் கல்லில் சமைத்து விட்டான் சிற்பி. வலது கையில் தாமரைமலருடன், துவண்டு வளைந்து நெளிந்து நின்றிருந்தாள். அவள் இடையின் வளைவில் சிங்காரச் சோபை; அவள் உதட்டின் வளைவில் பெருமையின் மலர்ச்சி. மருண்ட நோக்கில் உலகமே மயங்கும் இனிமை. இப்படிப்பட்ட கலை அம்சம் பொருந்திய சிற்பம் அந்தக் கோயிலுக்கே ஒரு பொக்கிஷம் என்பது எல்லாருடைய அபிப்பிராயம்.

●

கையில் இருக்கும் தடியைக் கீழே தட்டிக் கொண்டே சென்ற பிச்சைக்காரக் குருடன் 'பளிச்' சென்று ஒரு நிழல் தன் சூட்சுமக் கண்ணில் விழவே நடையைத் தளர்த்திக் கொண்டு, மிகவும் ஜாக்கிரதையாக அடி எடுத்து வைத்தான்.

மறுகணம்—

ஒரு பாறுங்கல்லின் ஸ்பரிசம் அவன் தடியில் பட அதே இடத்தில் நிதானமாய் நின்று விட்டான். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, தோளில் தொங்கும் மூட்டையைக் கீழே இறக்கித் தன் ஜாகையை அங்கேயே விரித்துக் கொண்டான்.

அவன் தடியில் தட்டுப்பட்ட அந்தப் பாறுங்கல் அந்த நங்கையின் சிற்பம் நிகழும் அலங்கார மேடை என்பது அவனுக்கு என்ன தெரியும்? ஆனால் அந்த இடத்தில் அவன் ஜாகையை விரித்துக் கொண்டதற்குக் காரணம் இல்லாமலில்லை. கோயிலுக்கு வரும் பக்தர்கள் எல்லாரும் இந்தச் சிற்ப வாசலின் வழியாகத்தானே வரவேண்டும்? பக்தர்களின் கருணையால் நிறையப் பிச்சை கிடைக்கலாமல்லவா?

தனக்குமுன்னால் சர்பவியாபியாகப் பரந்து கிடக்கும் அந்தகாரத்தைப் பார்த்துக் கொண்டு அலங்கார மேடையில் அவன் சாய்ந்தான்.

●

அவன் அங்கே ஜாகையை விரித்துக்கொண்டு ஒரு வாரமாகிவிட்டது. ஆனால் ஒரு பக்தனின் கருணையாவது அவனுக்குக் கிடைக்கவில்லை. பக்திப் பரவசத்தால் மெய்மறந்த பக்தர்கள் அவனையும் மறந்துவிட்டுப் போய் விட்டார்களோ, என்னமோ! ஆனால், அவர்கள் அந்தக் கலையின் எல்லையைத் தொட்டு நிற்கும் அந்த நங்கையின் சிற்பத்தைப் பார்ப்பதற்கு மட்டும் மறக்கவில்லை.

'அற்புதம்!'-என்று அதைப் பார்த்து ஒருவர் வியந்தார்.

'என்ன அழகு!' — என்று நங்கையின் அழகிலே தன்னைப் பறி கொடுத்தான் ஒரு வாலிபன்.

'ஆஹா, என்ன வேலைப்பாடு!' —என்று வியந்தார் ஒரு ரசிகர்.

'ஆ! அந்தக் கண்களே போதுமே!'—இப்படிஒருவர்.

'சிக்' என்று மூடியிருக்கும் தன் கண்களைக் கசக்கிக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு எழுந்து நின்றான். மேடைக்கு மேலே தடவிப் பார்த்தான். இரண்டு பாதங்கள் தட்டுப்பட்டன. ஆம், ஒரு பெண்ணின் பாதங்கள். ஆனால் அவனுக்கு என்னவோ வெறுங் கல்லாய்த் தான் தோன்றின.

'வெறுங் கல்!'—என்று சொல்லிச் சிரித்துக்கொண்டான். வெறுப்போடு கிளம்பிய அவன் சிரிப்பு உலகத்தையே கேலி பண்ணும் தோரணையில் இருந்தது.

அவன் திரும்பவும் தன் இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டு, தனக்கு முன்னால் காசு வாங்குவதற்கென்று விரித்திருந்த துணியைத் தடவிப் பார்த்தான். அதில் இரண்டு தினங்களுக்கு முன், ஒரு யுவதி சிற்பத்தில் எறிந்து விட்டுப் போன மல்லிகைப் பூ மட்டும் அவனைப் போலவே வாடித் துவண்டு



கிடந்தது. அதை எடுத்து அப்பால் எறிந்துவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டான். அவன் சுவாசத்தின் வேகத்தில் மல்லிகைப் பூ கருகியிருக்க வேண்டும்.

எலும்பும் தோலுமாய்ப் போய்விட்ட அவன் விகாரமான உருவம் அலங்கார மேடையில் சாய்ந்து கொண்டது.

●

அன்று வெள்ளிக்கிழமை; அடியார்கள் அதிகமாய் வரும் தினம். அவனும் ஒரு புது உற்சாகத்தோடு தனக்கு முன்னால் இருந்த துணியை நன்றாக விரித்துக் கொண்டான்.

மேளத்தின் ஒலி, குழந்தைகளின் அழுகை ஒலி, பூவின் மணம் இவைகள் எல்லாம் அயர்ந்து போய்விட்ட அவன் உயிருக்கு நம்பிக்கை ஊட்டின.

அன்று கோயிலுக்கு வந்த ஒவ்வொருவரும் அவன் பக்கத்தில் நின்று, அவன் சாய்ந்திருந்த மேடைக்கு மேலே உள்ள சிற்பத்தைப் பார்த்தார்கள். சிற்பத்தைச் செய்த சிற்பியை மிகவும் புகழ்ந்துவிட்டுப் போனார்கள். ஆனால், அந்தப் பிரமாண்டமான சிற்பத்தின் காலடியில் சுருண்டு கிடந்த ஜீவன் உருவத்தை அருவருப்போடு பார்த்து விட்டுப் போனார்கள்.

●

பொழுது சாயும் வேளை. கபோதியின் நம்பிக்கை அஸ்தமித்துவிட்டது. தன்னைச் சுற்றி நிரந்தரமாகக் குடிகொண்டிருந்த இருளில் அவன் சோர்ந்து கிடந்தான்.

இப்பொழுது அவன் முன்னால்—

பேராசிரியர் கணேசலிங்கம் நின்றுகொண்டிருந்தார். அவர் ஒரு சிறந்த ரசிகர். கலை வளம் கொழிக்கும் பல கோயில்களின் சிற்பங்களை அவர் பார்த்திருக்கிறார். ஆனால், அந்த மேடையிலிருக்கும் சிற்பத்தைப் போல் எங்கும் பார்த்ததில்லை. அசையாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கபோதி தன் தலைக்குமேல் கைகொண்டு, 'இந்த ஏழைக்குக் கருணை காட்டுங்கள்!'—என்று ஈனஸ்வரத்தில் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். பேராசிரியர் காதுகளுக்கு அவன் குரல் விழுவதற்கு முன்பாகவே, நாயகன் வரவுக்காகக் காத்திருந்த அந்த நங்கையின் குரல் விழுந்து விட்டது.

ஆராய்ச்சிக் கண்களோடு அந்தச் சிற்பத்தின் அடியிலிருந்து முடிவுவரை அங்கமங்கமாக ஆராய்ந்தார் பேராசிரியர். பிறகு தம் அருகில் நின்ற மாணவனிடம் சொன்னார்: 'உயிரற்ற கல்லை ஒரு சிற்பி பார்த்தான். அந்தக் கல்லிற்கு ஓர் உருவம் கொடுத்தான். அது மட்டுமல்ல, அந்த உருவத்திற்குள் ஓர் உயிரையும் புகுத்திவிட்டான், பார்!'

மாணவன் பலமாகத் தலையை ஆட்டினான்.

'ஐயா, கருணை காட்டுங்கள்!'—என்று கபோதி கத்திக் கொண்டிருந்தான். ஆனால் கொட்டும் மேளமும், கூத்தும் கும்மாளமும், அவன் குரலை அமுக்கி விட்டன. அதோ, ஆண்டவன் பவனி ஆரம்பித்துவிட்டார். பேராசிரியரும் மாணவனும் அதோடு கலந்து மறைந்து போனார்கள்.

●

தள்ளாடிக் கொண்டு கிழவன் எழுந்து நின்றான். அவன் தலை சுழன்றது. காது அடைத்துக் கொண்டது. ஏதோ அரைகுறையாகப் பிதற்றிக் கொண்டே பேராசிரியர் ஆராய்ந்த சிற்பத்தை தடவிப் பார்த்தான், உயிர் இருக்கிறதா என்று. ஆனால், கல்லைத் தவிர அவன் கண்டது வேறு ஒன்றுமில்லை.

தன் தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு, 'உயிரற்ற இந்தக் கல்லில் உயிரைப் பார்த்துவிட்டார்கள்! தேய்ந்து போன என் உடலில் ஊசலாடும் உயிரை யார் பார்த்தார்கள்?' என்றான்.

(13-ம் பக்கம் பார்க்க)

# நற்றமிழின் பொற் காவலன் அமரர் கந்தையா

சி. நவஜோதி

பேரன்பின் இருப்பிடமும், பொது நலத்தின் பிறப்பிடமும், நற் தமிழின் பொற்காவலனுமாகிய எம் தலைவர் கந்தையா, எமை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தி கேட்டதும், சற்றும் நம்பவே முடியாத நிலையிலிருந்தார்கள் எம் மக்கள். பட்டகாலிலே படும் என்ற முதுமொழி, தமிழன், அதுவும் அடிமை வாழ்விலிருந்து விடுதலை காண அல்லலுறும் தமிழன் வாழ்விலா மெய்யாக வேண்டும்? அன்னை மொழியை வாழ வைப்பேன் என்றவனியரும், தமிழை அரசு ஏற்றிடுவேன் என்ற ஏகாம்பரனாரும் எமை விட்டுச் சென்ற பின், இதோ நான் இருக்கின்றேன் காத்திடுவேன், தமிழை அரசு மொழி ஆக்கிடுவேன், எனக் கங்கணம் கட்டிய கந்தையாவும் கவலையில் எமையாழ்த்திக் கண் மூடியது, இவையெல்லாம் எமக்கென்ன சாபக்கேடா?

தமிழ் கூறும் நல்லுலகுக்கோர் ஈடு செய்ய இயலாத பேரிழப்பன்றோ தலைவர் கந்தையாவின் இறப்பு. கவலையே உருவெடுத்த அபலைகளாகத் தவித்து நிற்கும் தமிழ் மக்களுக்கு மேலும் தாங்கொணாக் கவலையாக அமைந்துள்ளது அவர் மறைவு. எனினும் என் செய்வோம். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் மீண்டும் வருவாரோ! ஆதலால் உலகின் நிலையாமையை எண்ணியேனும் தேற்றுவாரற்று, தேடுவாரற்று தேம்பித் திரியும் எமை நாமே தேற்றிக் கொண்டு விடுதலைக்கு அவர் எமக்குக் காட்டிய வழியே நாமும் செல்வோமாக. அவர் முயற்சி-கொண்டிருந்த தன்னம்பிக்கை இவை எமக்கு உறுதுணையாக, வழிகாட்டியாக அமையட்டும்.

தந்தை செல்வாவுக்குச் செல்வராய், நமக்கெல்லாம் அருட் செல்வராய் இருந்த கந்தையா அவர்கள் தமிழ் காக்க முற்பட்ட குற்றமோ என்னவோ காலனால் மீளாச் சிறையிடப்பட்டார்.

ஓர் கனி பயக்கும் மரத்தைப் போன்றவர் கந்தையா. மரமானது தன்னை வளர்த்த நண்பனுக்கும், தன்னை அழிக்க வந்த பகைவனுக்கும் ஒரே வித பலன்களைக் கொடுப்பது போன்று தன் நண்பன்; பகைவன், இருவருக்கும் பாகுபாடின்றிப் பணி புரிந்த மகான். அரசியல் துறையில் மட்டும் நாம் அவரைக் காணவில்லை. எம் வாழ்வின் ஒவ்வோர் கட்டத்திலும் அவரைக் கண்டோம். உண்மைத் தமிழனிடம் இருக்கவேண்டியவை யாவும் அவரிடமே குடிபுகுந்திருந்தன. அப்படியே அவரும் வாழ்ந்தார். மாற்றாரையும் இப்படியே வாழுங்கள் என வாழ வைத்தார்.

பல வகையிலும் நமக்கு வழிகாட்டும் விளக்காக இருந்த விளக்குத்தான் அணைந்துவிட்டதே. இந்த இடத்தில் வேறோர் விளக்கு வரலாம், வராது போய்விடலாம். எனினும் நன்றி மறவா நற்குணம் படைத்த நற் தமிழன் இவ்வுலகில் வாழும் வரை தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த திரு. கந்தையாவின் நினைவு நீங்காத நினைவேதான். அவர் என்றும் அமரரேதான்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வரய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# வடநாட்டில் புகழ் பெருக்கும் வகிதா ரஹ்மான்

## வளர்ந்த இடத்தைத் துறந்ததனால் புகுந்த இடம் போற்றுகிறது

"ஏரு பூட்டிப்போவாயே அண்ணே என் சின்னண்ணே," என்ற பாட்டிற்கேற்ற நடனமுமாடி தமிழ் சினிமா உலகில் பிரவேசித்த வகிதா ரஹ்மான், நிலையாகத் தமிழ் சினிமா உலகில் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. குத்து விளக்கு இருக்குமிடத்தில் பிரகாசத்தை மறைத்து வெளியிடங்களுக்கு ஒளிபரப்புவதுபோல தமிழ் நாட்டைச் சார்ந்த நடிகையான வகிதா தன் கலை ஒளியை வட நாட்டிலே பிரகாசிக்கச் செய்து வருகிறார்.

24 வயதையுடைய வகிதா ரஹ்மான் இயற்கை அழகும், துடிப்பான நடிப்பும் கொண்டவர். 'காலம் மாறிப் போச்சு' என்ற படத்தில்தான் 'ஏரு பூட்டிப் போவாயே' என்ற பாட்டைப் பாடுகிறார். அப்படத்தில் தோன்றியதன் மூலம் ரசிகப் பெருமக்களின் கவனத்தைக் கவர்ந்த அவர் 'ஜெயசிம்மன்' படத்திலும் நடித்தார். பரத நாட்டியமும் நன்றாகப் பயின்ற இவரைத்தமிழ் நாட்டுப் பட முதலாளிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதனால் தானோ என்னவோ வட நாடு சென்று விட்டார்.

எழிலையும், எடுப்பான தோற்றத்தையும், இதமான நடிப்பு, இனிமையான பேச்சு முதலியவற்றையும் கணித்துக் கொண்ட வட நாட்டுத் தயாரிப்பாளர்கள், வகிதாவை முன்னணிக்கு இழுத்துச் சென்றனர். ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு படத்திலும் கதாநாயகியாகவே வகிதா நடிக்கலானார்.

தமிழ் நாட்டில் மூன்றாந்தர நடிகையர் கணக்கில் பிரித்து ஒதுக்கப்பட்ட நடிகை வட நாட்டில் முன்னணி நட்சத்திர ஸ்தானத்தை அடைந்தமை தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களிடையே பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

வகிதாவுக்கு இப்பொழுது 24 வயது நடைபெறுகிறது. சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்த சமயம், தென்னாட்டில்—சென்னையில் பிரபல நடன நட்சத்திரங்கள் அவர் முன்னிலையில் நடனம் ஆடினர். பம்பாய் வரவேற்பில் வகிதா ரஹ்மான் தான் நடனம் ஆடி, சீனப் பிரதமரின் பாராட்டுதலைப் பெற்றார். அவர் கொடுத்த அன்புப் பரிசான 'குடை'யை இன்றும் பாதுகாத்து வைத்துள்ளார்.


வகிதா ரஹ்மான்

சென்னைத் தமிழ்ப் படத் தயாரிப்பாளர் ஒருவர் அண்மையில் பம்பாய் சென்றிருந்தாராம். அவர் அங்குள்ள படப்பிடிப்பு நிலையங்களில் ஒன்றைச் சுற்றிப் பார்வையிடுகையில், வகிதா ரஹ்மான் முறுக்கு மீசையுடன் கூடிய ஒரு முரடரின் பாத்திரத்துக்காக ஆண் வேடம் புனைந்திருந்தாராம். முன்னமேயே தெரிந்திருந்த தயாரிப்பாளரைக் கண்டதும் வகிதா அவருக்கு மரியாதை செய்தாராம். தயாரிப்பாளர் விடயம் புரியாமல் திண்டாடினாராம். படப்பிடிப்பு முடிந்து வேடங் கலைந்து வகிதா வந்து அவரருகிலிருந்து தமிழில்பேசிய போது ஆச்சரியப்பட்டாராம். வெகு நேரம் சென்ற பின்னர்தான் வகிதா ரஹ்மானை அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்ததாம்.

தான் தயாரிக்கப் போகும் அடுத்த படத்தில் நடிக்க வரும்படி தயாரிப்பாளர் தமது கோரிக்கையை விடுத்தபோது, தமிழ் நாட்டுக்குப் படப்பிடிப்பு சம்மந்தமாகத்தான் வரப் போவதில்லை என்று வகிதா கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

முஸ்லிம் மதத்தவரான வகிதா ரஹ்மான் முதன் முதலில் தமிழ் சினிமாக்களில் புகுந்து கொண்டபோது, அவருக்கு அதிகமான எதிர்ப்பு தமிழ் நாட்டில் உண்டாகியதாம். தனது கலைக்கு மதிப்பளிக்காத ஒரு இடத்தில் இருக்க முடியாது என்பதனாலேயே வகிதா தமிழ் நாட்டை விடுத்து வடநாடு சென்று தமது கலை ஆர்வத்தைப் பூர்த்திசெய்து முன்னுக்கு வருகிறார்.


காளையின் முகத்தைக் கன்னி நோக்குகிறாள். காளையின் கண்களும் கன்னியை நோக்குகின்றன. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு காட்டி அணைத்து விளையாடுகின்றனர். சாத்தனார் அணையை அடுத்த பூங்காவிலே துள்ளி விளையாடும் இந்த இரு புள்ளி மான்களையும் எண்டர்டெயின்மெண்ட் திரைகளில் வெளியிடப்பட்டுள்ள 'சுமைதாங்கி'யில் காணலாம்.

வெறும் நாற்காலிகள் ரசித்த

## இலங்கையில் நாம்

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை பின்னணியாக வைத்து அமைக்கப்பட்ட 'இலங்கையில் நாம்' என்ற நாடகம் கடந்த வாரம் மட்டக்களப்பில் நடைபெற்றது. இலங்கை நாடகத் துறையில் பழுத்த அனுபவம் பெற்ற நடிகவேள் லடீஸ் வீரமணி இந் நாடகத்தைத் தயாரித்தளித்தார்—நடித்தார். இந் நாடகத்தைப் பற்றி நாம் குறை எதுவும் கூறுவதற்கில்லை. 100 மேடைகளில் செய்ய வேண்டிய பிரசாரத்தை இந்நாடகத்தின் மூலமே செய்துவிடலாம்.

மட்டக்களப்புக்கு லடீஸ் குழுவினர் வரப்போகிறார்கள் என்பதைப் பத்திரிகைகளில் பார்த்த பலர் நாடகத்தை எதிர்பார்த்திருந்தனர். இம்மாதம் 7ம் திகதி நடைபெறுவதாக விருந்த நாடகத்தைக் காணச் சிலர் மண்டபம் வரை சென்று ஏமாந்தனர். ஆனால் திடுதிப்பென்று 15ம் திகதி வந்து குதித்தார்கள். நகர மண்டபத்திலிருந்த நாற்காலிகளுக்கு மட்டும் நாடகம் நடத்தினார்கள்.

மட்டக்களப்புக்கு நாடகத்தைத் தருவித்தவர்கள் யார்? எந்நோக்கத்துக்காக தருவித்தார்கள்? இவை மட்டக்களப்பிலுள்ள எவருக்குமே தெரியாது. நுழைவுச் சீட்டுகளையோ விளம்பரங்களையோ எதையுமே வெளியிடாமல் நாடகம் நடந்தது. 'மட்டக்களப்பு மக்கள் கலாரசனை உள்ளவர்கள் அவர்களின் ஆதரவு நாடகக் கலைக்கு எப்போதும் உண்டு,' என்று நாடகக் குத்தகையாளர் திடகாத்திரத்துடன் கடைசி நிமிடம் வரையும் எதிர்பார்த்து தன் முகத்தில் தானே கரிபூசியதோடல்லாமல் நாடகக் குழுவினருக்கும் அதையே செய்து தீர்த்து விட்டார்.

நாடகம் நடைபெறும் விடயம் மட்டக்களப்பு நகரத்தின் கடைவீதியிலுள்ளவர்களுக்கே தெரியாது. எவருக்கும் நுழைவுச் சீட்டுகள் விற்கப்படவேயில்லை. சினிமாக்கலை சிறப்பாக வளர்ந்துள்ள இக்காலத்தில், விளம்பரம் செய்யப்படாமலும், நுழைவுச் சீட்டுகள் விற்கப்படாமலுமிருந்தால் யாராவது நாடகம் பார்க்க வருவார்களா?

கலை ஆர்வம்மிக்க மட்டக்களப்பு மக்களின் தன்மையை உணராது நாடகக் கலையை அவமானத்துக்குள்ளாக்கியவர்கள் நாடகக் குழுவைத் தருவித்தவர்களே அன்றி வேறு எவரும் அதற்குப் பொறுப்பாளர்களல்லர்.

காலத்துக்கேற்ற கருத்துச் செறிவும், மேடைக்கேற்ற நடிப்பும், கலை அம்சங்களும் பொருந்திய நாடகமாக விருந்தும், அதை மக்கள் ரசிக்கப் போதிய சந்தர்ப்பத்தை அளிக்காது தடுத்தவர்கள் நிச்சயமாகக் கொடிய குற்றவாளிகளே!



## ஓரே கேள்வி ?

எதிர்பாருங்கள்!

கையினிலே வீரவாள் எடுத்து விட்டால், பொய்யர்களும் புரட்டர்களும், எத்தர்களும் ஏமாளிகளும் இருந்தவிடம் தெரியாமல் ஓடுவரே!

கன்னியரின் கடைக்கண் கூரியவாள் காளையரில் பட்டுவிட்டால், வான் நோக்கி உயர்ந்த கூர்வாள் தரை நோக்கி விழுந்திடுமே!

ஆண்மைக்கு இலக்கணம் தேடும் அறிஞருக்கு ஆராய்ச்சி விருந்தளிக்கிறார் ஆணழகர் ஆனந்தன்.

படம்: வீரத்திருமகன்.

## யாழ். கலை அரங்க ஆண்டு விழா

யாழ். கலை அரங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா அண்மையில் கொட்டாஞ்சேனை விவேகானந்த மண்டபத்தில் முத்தமிழ் விழாவாக நடைபெற்றது. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் யாழ். கலை அரங்கப் புரவலர் வித்துவான் இ. சி. சோதிநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திய பின் சிறப்புச் சொற்பொழிவாற்றிய தமிழரசுத் தந்தை திரு. சா.வே. ஜே. செல்வநாயகம் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிடும்போது, 'எமது மூதாதையர்கள் வளர்த்துத் தந்த தமிழ் மொழியை அழிய விட்டு விடாது அதை நன்கு வளர்த்து நமது வருங் காலச் சந்ததியினருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் நம்மை அவர்கள் சபிப்பார்கள். எல்லாத் துறைகளிலும் குறிப்பாக மனோதத்துவ சாஸ்திரம், உடற்கூறு சாஸ்திரம், வான சாஸ்திரம், புவியியல் சாஸ்திரம் போன்றவைகளை யெல்லாம் தமிழில் படித்தறியக் கூடிய அளவுக்குத் தமிழைவளர்க்க வேண்டியது தமிழர் தம் கடமை. கடமையைச்செய்ய யாவரும் முன்வர வேண்டும்' என்று கூறினார்.

சாவகச்சேரிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வ. ந. நவரெத்தினம், அன்பர் பூபதி தாசர், திரு. ஏ. இளஞ்செழியன், திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், ஆழிக்குமரன் ஆனந்தன் ஆகியோர்களும் கருத்துரை வழங்கி முடிந்த பின், திருமதி கிரிஜா சுப்பிரமணியம் அவர்களின் இன்னிசைக்கச்சேரி நடைபெற்றது. பின்னர் நடன ஆசான் திரு. கே. என். நவரெத்தினம் அவர்களால் நட்டுவாங்கம் செய்யப்பட்ட விவேகானந்த நடன மன்ற மாணவிகளான செல்விகள் சித்திரா சிவநாயகம், நடராசா கலாராணி, இராமலெட்சுமி ஆகியோரது நடனம் இடம்பெற்றது. அடுத்து யாழ். கலை அரங்கினர் தயாரித்த 'அன்புமணி' யின் 'ஆத்ம திருப்தி' என்ற நாடகம் நடைபெற்றது. 'வரணியூரான்' அவர்களின் பயிற்சியில் உருவான இந்நாடகத்தில், திரு. எஸ்.எஸ். கணேசபிள்ளை, திரு. ஏ. சுப்பிரமணியம், செல்வி. நிர்மலா ஜோர்ஜ் ஆகியோர் நடித்தனர்.

கடைசி நிகழ்ச்சியாக தென்மராட்சி முத்தமிழ்க் கலை மன்றத்தினரின் 'மணியகாரன் மகன்' என்ற நாடகம் இடம் பெற்றது. இதில் ஆர். டி. சுப்பிரமணியம், நடிகவேந்தன் கே. பரமசாமி, கிருஷ்ணன், ஏ. பி. செல்லையா, பிஸ்ஸி சேவியர் அன்ரன், 'ஈழம் செல்வந்தி' எஸ். சிவசண்முகநாதன், சுந்தரலிங்கம், தில்லைநாதன், வேலாயுதம், செல்வநாயகம் ஆகியோர் நடித்தார்கள்.

ஈற்றில் யாழ். கலை அரங்கப் பொருளாளர் பொன். தியாகராசா நன்றியுரை நிகழ்த்தினார். இந்த முத்தமிழ் விழாவை வேலணை வீரசிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

## மண்ணும் மங்கையும்

தான் பிறந்த பொன் நாட்டைக் காக்கும் பணியில் தன் உயிரையே நீத்த வீரத் தமிழ் மகனின் உணர்ச்சிக் காவியமாகத் திகழும், கிறசன்ட் ஆர்ட் புரடக்ஷன்சாரின் 'மண்ணும் மங்கையும்' என்ற நாடகம் 7-7-63 மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

குணசித்திர நடிகர் ஏ. சிதார் இந் நாடகத்தைத் தயாரித்து அளிக்கிறார். அத்துடன் இந் நாடகத்திலும் நடிக்கிறார். இதற்கான கதை வசனத்தைத் திரு. கே. எம். வாசகர் எழுதியுள்ளார். லெனின் மொறாய்ஸ் இந் நாடகத்தின் இயக்குநர்.

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று! பிறர் அனுபவங்கள் காதலுக்கு வழிகாட்டவே முடியாது! காதல் நிறைவேறுவது பெரும்பாலும் மிகவும் கடினம் என்பது எல்லாருக்கும் தெரியும்! காதலால் எத்தனையோ பேர் சீரழிந்திருக்கிறார்கள் என்பதும், நமக்குத் தெரியும்! ஆனாலுங் கூட, அவற்றை நாம் உணர்கிறோமா? காதலுக்கு முன் கண்ணடைத்துப் போகிறது! காதும் அடைத்துப் போகிறது! கால்விட்டு அனுபவம் பார்க்கவே விரும்புகிறோம்!...'

'காதலில் தானப்பா, உலகமே தங்கியிருக்கிறது.'

'அது தவிர்க்க முடியாத தேவை!'

—ராஜகோபால் நடந்து கொண்டிருக்கிறான். ஆனைப் பந்தி சந்தியைக் கடந்து, அம்பலவாணர் வீதியில் திரும்புகிறான்.

படலையைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைகிறான். வீடு அந்தகார மௌனத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. ஒருவரையும் காணோம். வெளித் திண்ணையைக் கடந்து, நடு அறைக்குள் கால்களைப் பதிக்கிறான். அங்கே—

சரசு மனதை எங்கோ அலைபாய விட்டு விட்டு அமர்ந்திருக்கிறாள். இவன் வந்ததை அவள் காணவில்லை.

'ஆச்சி!...' என்றழைக்கிறான். அவள் என்ன செவிடா?

'ஆச்சி! அண்ணி!...' என்று மீண்டும் கத்துகிறான்.

அவள் செவிடில்லை!

'யாரது?...' என்று பதறித் துடித்து எழுந்த அவளுக்கு, முன்னால் அவன் நிற்பதைப் பார்த்தவுடன் வெட்கம் பிடுங்கித் தின்கின்றது.

'அவையள் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டினம்'—வார்த்தைகள் மணிகளாக உதிர்கின்றன.

'அப்ப நான் சரியான நேரத்திலை தான் வந்திருக்கிறன்' என்று மெல்ல முணுமுணுக்கிறான்:

'உங்களை நான் ஒன்று கேட்பேன், கோபிக்காமல் பதில் சொல்லுவீங்களா?'

கண்ணிமைகள் படபடக்க, உள்ளம் திடீரென்று இனிக்க, விழிகளை மலர்த்தி, அவனைப் பார்க்கிறாள், சரசு!

(தொடரும்)

# எட்டப்பர்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டி வேலரா மஞ்செஸ்ரருக்குச் சென்று ஒரு பாதிரியாருடன் தங்கினார். மைக்கேல் கொலின்ஸ்ஸும் ஹரி போலண்டும் புகை வண்டியில் லண்டனுக்குப் பிரயாணமாகினர். அடுத்த நாள், டி வேலரா தப்பிச் சென்றது காட்டுத் தீ போல் உலகெங்கும் பரவியது. லண்டன், கிளஸ்கோ, பரிஸ், டப்ளின் ஆகிய நகரங்களிலும் மீன்பிடி தோணி யொன்றிலும் சிறு வள்ளமொன்றிலும் சிறு தீவு ஒன்றிலும் டி வேலரா காணப்பட்டதாகப் பத்திரிகைகள் பலவாறாக எழுதின; அமெரிக்கக் குடியதிபதி வில்சனைச் சந்திப்பதாக வாயுக்கூண்டு ஒன்றில் பரிஸுக்குச் சென்றுவிட்டதாகவும் பிரசுரித்தன. ஆனால் ஏமன் டி வேலராவோ மஞ்செஸ்ரரில் மறைந்திருந்தார்!

லண்டனுக்குச் சென்றிருந்த கொலின்ஸ்ஸும் போலண்டும் லிவப்பூலை அடைந்து அங்கிருந்து மாலுமிகளைப் போல் மாறுவேடம் பூண்டு கப்பலில் டப்ளினுக்குச் சென்றார்கள். சில நாட்களுக்குப் பின் தலைமை நிலையத்தில் நடைபெற்ற தொண்டர் படைக் கூட்டத்தில் தண்டநாயகன் கதல் புருகா பேசும் பொழுது, "மக்களால் முறைப்படி தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்து அமைக்கப்பட்டதே தோள் அயரின். ஆகையினால் இப்பொழுது தொண்டர்கள் யாவரும் அயர் குடியரசின் இராணுவத்தினராவர். அந்தத் தொண்டர்கள், அன்னியரான ஆங்கில ஏகாதிபத்தியத்தினரை நமது நாட்டைவிட்டு விரட்டுவதோடல்லாமல், அவர்களுக்கு உடந்தையாக இருந்து உளவு சொல்லுபவர்களையும் ஆதரவு கொடுப்பவர்களையும் பாரபட்சமின்றிச் சுட்டுத்தள்ளவேண்டும்" என்று கூறினார்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 1803ல் புரட்சி செய்து தூக்குத் தண்டனை பெற்று உயிரைப் பலி கொடுத்த ரொபட் எமட்டின் நினைவு தினம் 4-3-1919ல் மன்சன் இல்லத்தில் நடைபெறவிருந்தது. 'மிகவும் பிரபல்யமான குடியரசுவாதி ஒருவர்' அக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார் என அறிவிக்கப்பட்டது. மக்கள் திரள் திரளாக வந்திருந்தனர். கூட்டம் ஆரம்பமாகியதும் கதவுகள் யாவும் பூட்டப்பட்டன. வெளியே இரகசியப் பொலீஸார் அந்தப் பிரமுகரைக் கைது செய்வதற்காகக் காத்து நின்றனர். பிரமுகரும் மேடையில் தோன்றினார்!

(வளரும்)

# நமக்குள்ளே....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி இருந்திருந்தாலல்லவா அவர் படித்திருப்பார்! காலமும் இடமும் அறிந்து இந்த நல்ல பழமொழியை உபயோகித்த தலைவர் கட்டாயம் பாராட்டப்பட வேண்டியவர்.

ஆபாசக்கலைஞர் (சிங்கப்பூரார்) உபயோகித்த வார்த்தைகளை, உதாரணத்துக்காகவேனும் இப்பத்தியில் குறிப்பிடமுடியாத நிலையில் நான் இருக்கிறேன். அவரது 'ஏதேச்சாதிகார' வார்த்தைகள் அச்சில் வரத் தகுதியற்றவை. சான்றோர் அவற்றைத் தம் வாயால் சொல்வதற்கும் கூசுவர். அத்தனை கீழ்த்தரமான வார்த்தைகளை ஆபாசக்கலைஞர் (சிங்கப்பூரார்) உபயோகித்தார்.

"நானும் முற்போக்காளன் தான்" என்று கூறித் தலைவர் மண்டியிட்டதாகக் கயிறு திரிக்கிறார் (ரஷ்ய) தேசபக்தன். அந்தோ! பரிதாபம்! தலைவர் சொன்னதே புரியவில்லை (ரஷ்ய) தேச பக்தனுக்கு! தமிழில் பற்று வைப்பவர்கள், தமிழினத்தில் பற்று வைப்பவர்கள், அனைவரும் வகுப்புவாதிகள், அசல் பிற்போக்கு வாதிகள் என்பது முற்போக்கு எழுத்தாளர்களின் சித்தாந்தம். தன் சொந்த மொழியின் மீதும், சொந்த இனத்தின் மீதும் பற்று வைப்பவன் தான் உண்மையான முற்போக்குவாதி, என்பது உலகத்திலுள்ள தலை சிறந்த அறிஞர்கள் எல்லோரதும் அபிப்பிராயமாகும். இந்தக் கொள்கையை உடையவர் தான், அன்று கருத்தரங்கத்திற்குத் தலைமை தாங்கிய அறிஞர் அவர்கள். அதனால்த் தான் துணிவுடன் "நீங்கள் மட்டும் முற்போக்கு வாதிகளல்ல, நான்தான் முற்போக்குவாதி" என்று சொன்னார்.

தலைவரின் கொள்கையை நன்குணர்ந்த பலருக்கு, அன்று அவர் பேசியதன் அர்த்தம் உடனேயே தெரிந்துவிட்டது ஆனால் சிந்தித்து சீர் தூக்கிப் பார்க்கத் தெரியாத (ரஷ்ய) தேசபக்தன் அவசரப்பட்டுவிட்டார். "முற்போக்காளன்" என்ற சொல் தலைவரின் வாயிலிருந்து வெளி வந்தது தான் தாமதம், (ரஷ்ய) தேசபத்தனின் மூளை மேலே வேலை செய்ய மறுத்துவிட்டது. "சரி, தலைவர் பயந்து விட்டார். எங்கள் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்துவிட்டார்" என்றெல்லாம் அளக்கத் தொடங்கிவிட்டார்.

'முற்போக்கு' என்ற ஒரு சொல்லைக் கேட்டவுடனேயே இப்படியெல்லாம் கயிறு திரிப்பவர்களுக்கு, 'நாய்க்கு எங்கே அடித்தாலும் காலைத்தான் நொண்டும்' என்ற பழமொழி பொருத்தமாக இல்லையா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உரை நடைக்கு என்றுமே யிருந்ததில்லை. ஆயின் உரை நடை தமிழில் இல்லையென நிறுவுவதும் இதன் கருத்தன்று. தொல்காப்பியக் காலத்தும் உரை நடை வழக்கிலிருந்ததென்பது அறிஞர் கருத்து. அதனையனுசரித்தே தமிழில் இலக்கியங்கள் காலத்துக்குக் காலம் மரபு சிதையாமல், பிறழாமல் ஆக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் இன்று 'அரைகுறையாக'ச் சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம் என்பன படைப்போர் 'தாமே தமிழுக்குச் சகலமும்' எனக் காட்டிக் கொள்வதைக் காணப் பெருநகைப்பே பிறக்கின்றது!

## சிறுகதை

தமிழுக்குச் சிறுகதைத் துறை புதிது என்பது பல எழுத்தாளர்களது 'முடிந்த முடிபாக'க் கூறப்படுகிறது. உருவத்தில் இவர்களது கூற்று ஓரளவு உண்மையாயினும் உள்ளடக்கத்தில் அஃது புதிது என உண்மையன்று. சிறுகதையும் பெருங்கதையுமாகக் கொள்ளக்கூடிய இலக்கியங்கள் அளவிறந்தன தமிழில் உள, இவற்றையறியாதாரும், உணராதாரும் 'சிறுகதை' தமிழுக்குப் புதிதென்று 'கதை'யளக்கின்றனர். இவ்வறியாமையின் காரணமாகவே இவர்களிற் பலர் 'சிறுகதைகள்' என்ற பெயரில் கருத்தற்ற, இலக்கிய நயமற்ற குப்பைக் கதைகளைப் படைத்து தமிழிலக்கியத்திற்கு 'நாலூறு' போக்குகின்றனர்போலும்! இது பற்றி அடுத்த கட்டுரையில் நன்காராய்வாம்!

## கவிதை

செய்யுளிலக்கியம் தமிழில் எவ்வளவுக்கு விசாலித்ததென்பது யாவருமறிந்த உண்மை. இஃதிவ்வாறாக கவிதைக்குப் பஞ்சம் வந்ததே போன்று, கவிதை பாடத் தெரியாத கவி[ஞர்]கள் எல்லாரும் வசன கவிதையென்ற பெயரில் என்னவெல்லாமோ 'கிறுக்கி'வைத்துத் தமக்குத்தாமே கவிஞர்கள் எனப் பெயருஞ் சூட்டிக் கொள்கிறார்கள்! பாவம், ஏனிந்தப் பரிதாப நிலைமையென வினவினால் பிறமொழி இலக்கியங்களில் வசன கவிதைகள் உளவே, தமிழுக்கு அவை வேண்டாவோ எனக் கேட்டுத் தமது 'அறியாமைக்கு' மேலுந் தலைப்பாக் கட்டி விடுகிறார்கள்!

ஆங்கிலம் ஆயினும் என், வேறு மொழிகளாயினுமென் அவற்றின் இலக்கிய வரலாறு தமிழினதைப் போன்று தொன்மையானதன்று. இலக்கிய வளமற்ற நிலையில் அவை பரிசோதனை முயற்சிகள் பலவற்றைக் கையாண்டு பார்த்துள்ளன. அவற்றிலொன்றுதான் இவ் வசன கவிதை முறையும். பெரிதும் ஆங்கில இலக்கியம் இக்காலத்து வசன கவிதை முறையை நிராகரித்துவிட்டதெனலாம். அன்றியும் தமிழில் 'வசன கவிதைகள்' வடித்துத் தருவதாகக் காட்டிக் கொள்பவர்கள் தரும் படைப்புக்களைப் பார்க்கும்போது 'பைத்தியக்காரர்களின் உச்சமொத்தமான உளறல்கள்' போன்றுள்ளன. இவற்றை இலக்கியமென்று காட்டிக் கொண்டு ஏன் தமிழுக்கு அவமானந்தேட வேண்டுமென்பதுதான் எனக்குத் தெரியவில்லை. வசன கவிதை கைவந்த வல்லாளர்கள் யாராவது இதனைத் தெள்ளிதின் விளக்கினால் பேருதவியாகும்.

## பிற துறைகள்!

கட்டுரை, நாடகம், உரையாடல்கள் ஆகிய துறைகளிலும் இவ்வாறே பல விளங்கா விளக்கங்கள் மலிந்துள்ளன. 'சிருஷ்டி இலக்கிய வாதிக'ளாகத் தம்மைக் கற்பித்துக் கொள்பவர்களுக்கு இவையெல்லாம் தெரியப்போவதேயில்லை, நாலைந்து சிறுகதைகளும், வரிக் கவிதைகளும், கொச்சைத் தமிழிற் பச்சை ஆபாசப் படைப்புகளுமே 'சிருஷ்டி இலக்கியம்' எனக் கூறிப் புலம்புவார்க்கு உண்மையான 'பிரச்சினைகள்' எவ்வாறு புலப்படும்? 'யானை கண்ட குருடர்களைப்போல' தமிழிலக்கியத்தைப் பற்றி இவர்கள் மனம் போனவாறு 'விளாசுகிறார்கள்' போலும்! இவர்களுக்காக இல்லாவிடினும் இலக்கிய ஆர்வமுடைய, வளர்ந்துவரக் கூடிய எழுத்தாளர்களுக்காகாவது இந்த எண்ணத்தை யூட்ட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

சிருஷ்டி இலக்கியப் பிரச்சினைகள இன்றைய 'சிருட்டி இலக்கியப் படைப்பாளர்களது' படைப்புகளில் எதுவுமேயில்லை. சிருஷ்டி இலக்கியம் என்னவென்பதே தெரியாத நிலையில் இன்றைய (சிருஷ்டி) எழுத்தாளர்கள் மயங்குகிறார்கள்! சிருஷ்டி இலக்கியப் பிரச்சினைகளை நன்குணர்ந்து கொள்ள முதலில் நமது பழந்தமிழிலக்கியங்கள் அனைத்தையும் படிக்க வேண்டும். அதனடிப்படையில் இன்றுள்ள சமூக யதார்த்த நிலையைக் கண்ணூரக் காண வேண்டும். நாளை பற்றிய 'தீர்க்க தரிசன'க் 'கனவை'த் தொட்டுக்காட்ட வேண்டும். இம்முறையிலாக்கப்பட வேண்டியன—ஆக்கப்படுவன தாம் சிருஷ்டி இலக்கியங்கள். சிருஷ்டி இலக்கியப் பிரச்சினைகள் பழைய இலக்கிய மரபில் கிளைத்தெழுவன. அவற்றை நன்குணர்ந்து எழுதுவோரை ஈழத்து இலக்கிய உலகு இரு கரங்களும் நீட்டி வரவேற்க நீண்ட நெடுங்காலமாகக் காத்திருக்கின்றது!

# கல் பேசுகிறது

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பவும் அவன் அந்தச் சிற்பத்தை அசைத்துப் பார்த்தான்; அது அசைவதாகத் தெரியவில்லை.

'கல்! கல்! அசையாத இந்தக் கல்லில் உயிர்! அசையும் என் உடல் பிணம்!'—என்று கத்திக் கொண்டே கீழே சாய்ந்தான்.

●

பொழுது புலர்ந்தது.

பிணமாய்க் கிடந்த அவன் உடலை ஒருவன் குப்பை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தான்.

அதே சமயம்—

மனோரம்மியமான அந்தக் காலை வேளையில் ஒரு கப் காப்பி அருந்திவிட்டு, 'கல் பேசுகிறது!' என்ற தலைப்பில் பேராசிரியர் கணேசலிங்கம் ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார்.

(யாவும் கற்பனை)


எழில் பொங்க! புகழ் தங்க!!
என்றும் அணியுங்கள்
லதா மணிப்புரி சாரிகள்



லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினாலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட், சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,
சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,
கொழும்பு.
—Mylads—

சுதந்திரன் பேச்சுப் போட்டி

# நேயர்களின் வேண்டுகோள்

பேச்சுப் போட்டி பற்றி பல அன்பர்கள் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். இக் கடிதங்கள் அனைத்தும் இரு விடயங் களை வலியுறுத்தி எழுதப்பட்டிருக்கின்றன.

### முப்பிரிவு

இப் போட்டியை வயதுக் கட்டுப்பாடு விதித்து முப்பிரி வாக அமைத்தால் நல்லது என்று கல்லூரி ஆசிரியர்கள் எழுதிய கடிதங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாமும் ஆரம்பத்தில் இப் போட்டியை முப்பிரிவாக நடத் துவதென்றே முடிவு செய்திருந்தோம். ஆனால், அவ்விதம் நடாத்துவதற்கு நமக்கு வேண்டிய அவகாசம் இன்மை யால் பொதுவாக பத்தொன்பது வயது என்ற கட்டுப் பாட்டை விதித்துள்ளோம். அடுத்த ஆண்டுகளில் நடை பெறவிருக்கும் போட்டிகள் முப்பிரிவாக வயதுக் கேற்ற முறையில் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வயதுக்கேற்ற முறையில் முப்பிரிவாகப் பிரித்தால், பேச்சுக்குரிய தலைப்புக்களும் வயதுக்கேற்ற முறையிலேயே அமைய வேண்டும். எனவேதான் நாம் இம்முறை தெரிந் தெடுத்திருக்கும் தலைப்புக்கள் சகல வயதினருக்கும் ஏற்ற தாக அமைந்திருக்கிறது.

### கண்டி

கண்டியில் இருந்து பல இளைஞர்கள், குறிப்பாகக் கல் லூரி மாணவ மாணவிகள் தாங்களும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு வசதியாக, கண்டியையும் ஒரு பேச் சுப் போட்டி நடைபெறும் இடமாகச் சேர்த்துக் கொள் ளும்படி வேண்டியிருக்கிறார்கள்.

நாம் கண்டிப் பகுதியில் உள்ளவர்களும் கலந்து கொள் வதற்கு வசதியாகவே 'அட்டனை' போட்டி நடைபெறும் இடங்களில் ஒன்றாகத் தெரிவு செய்திருந்தோம். ஆனால் கண்டியிலிருந்து கணிசமான அளவு விண்ணப்பங்கள் கிடைத்தால், ஹட்டனில் நடைபெறும் இடை இறுதிப் போட்டிக்கு முன்னர் கண்டி யிலும் ஒரு இடை இறுதிப் போட்டியை நடாத்தலாம். எனவே கிடைக்கும் விண்ணப்பங்களின் தொகையை பொறுத்தே கண்டியை யும் ஒரு இடமாகக் கணிப்பது பற்றி முடிவு செய்யப்படும். கண் டிப் பகுதியிலிருந்து போட்டியில் கலந்து கொள்ள மனுப் பண்ணுபவர்கள் 'போட்டியில் கலந்து கொள்ளும் இடம்' கண்டி என்று குறிப்பிடலாம். ஆனால் கணிசமான அளவு விண்ணப்பங்கள் கிடைக்காவிடின் இவர்கள் அட்டனில் நடைபெறும் இடை இறுதிப் போட்டியிலேயே கலந்து கொள்ள வேண்டும்.

### கல்லூரி இளைஞர்களுக்கு

கல்லூரி மாணவ மாணவிகள் கூட்டாக விண்ணப்பித் துக்கொள்ளுதல் நல்லது. அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மாண வர்கள் இவ்விதமே செய்து வருகிறார்கள். கூட்டாக விண்ணப் பித்துக் கொள்வதாயினும் ஒவ்வொருவரும் தனித் தனி விண்ணப்பப் பத்திரங்களையே பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் அவற்றை நமக்கு அனுப்பும்பொழுது ஒன்றாக ஒரு கடித உறையில் இட்டு அனுப்பலாம். அப்படி அனுப்புகின்ற பொழுது கல்லூரி முதல்வரிடமோ அல்லது வகுப்பு ஆசிரிய ரிடமோ இருந்து ஒரு கடிதம் இணைத்துக் கொள்வது நல்லது.

சிலர் விண்ணப்பப் பத்திரத்தை ஆங்கிலத்தில் நிரப்பி அனுப்பி உள்ளார்கள். ஆங்கிலத்தில் நிரப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். 'எல்லாம் தமி ழியக்கத்திற்கு' முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வேளையில் தமிழ் விண்ணப்பப் பத்திரத்தைத் தமிழிலே நிரப்ப முடிய வில்லை என்றால், இதைவிட வெட்கக் கேடான விடயம் வேறு என்ன இருக்க முடியும்?

போட்டி பற்றிய ஏனைய விளக்கங்களுக்கும் அறிவித்தல்களுக் கும் இப்பகுதியைத் தொடர்ந்து கவனிக்கவும்.

பேச்சுப் போட்டி ஆசிரியர்

.........................இங்கே வெட்டுங்கள்.........................

## "சுதந்திரன்" பேச்சுப் போட்டி விண்ணப்பப்பத்திரம்

பெயர்.................................................

முகவரி.................................................

.................................................

மாணவராயின் பாடசாலை முகவரி:-

.................................................

.................................................

போட்டியில் கலந்துகொள்ளும் இடம்.................................................

பேச எடுத்துக்கொண்ட பொருள்.................................................

பிறந்த திகதி......ஆண்டு.........மாதம்.........திகதி.........

................................. .................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




## வான்புகழ் வள்ளுவன்

(சிந்தனைச் செல்வி, ஏழாலை)

வாழ்க்கைக் கலையை உணர்ந்து உணர்த் திய பெரியார்களில் திருவள் ளுவரும் ஒருவர். இவர் உயர்ந்த கருத்துக்கள் மலிந்த, சுவையும் சுருக்க மும் நிறைந்த திருக்குற ளென்னும் புனித நன்னூலை உலக மக்களுக்கு ஈந்தார். வாழ்விற்கேற்ற பண்பு களிலே அன்பையே மிகச் சிறந்ததாக எடுத்துக் கூறு கிறார். உள்ளத்திலே மல ரும் அன்பு ஒன்றுதான் வாழ்வை வளம்படுத்த வல்லது. தன்னலத்தை அகற்றி பிறரும் வாழவேண் டும் என்னும் எண்ணத்தை உண்டாக்குவதும் அன்பு ஒன்றே. மக்கள் மக்களாக வாழ்வதற்கு கல்வி மிகமிக அவசியம் என்கிறார் வள்ளு வர். அறத்தையும் அன்பை யும் அடிப்படையாகக் கொண்டுதான் வள்ளுவர் திருக்குறளைச் சமைத்தார்.

ஆழங்காண முடியாத பெண்களின் உள்ளத்தை ஆழ்ந்து அறிந்தவர் வள்ளு வர் ஒருவர்தான். பெண்க ளின் மேல் கையாண்ட அடக்கு முறைகளை வள்ளு வர் விரும்பவில்லை. அதை

"சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

என்னும் குறள் மூலம் உல கிற்கு உணர்த்துகிறார். வள் ளுவர் ஆண் பெண் சமத்து வத்திலும் பெண்கள் உரி மையிலும் ஈடுபாடு கொண் டவர்.

வழுவாத நீதிதான் ஆட் சிக்கு சிறப்பு என்று கூறும் வள்ளுவர், உரிமையை உணர்ந்து கடமையைச் செய்து ஆட்சியைச் சிறக் கச் செய்யும்படி மக்களை வேண்டுகிறார். வள்ளுவர் கண்ட அரசாட்சி செம்மை யையும் உயர்வையும் காட்டு கிறது. அது அன்பையும், அறத்தையும் நடுநிலைமை யையும் அறிவுடைமையை யும் அடிப்படையாகக் கொண்டது.

அன்பும் அறமும் தான் வள்ளுவர் காட்டும் அரும் பெரும் செல்வங்கள். அன்பு காட்டுவது சுயநலமற்ற நல் வழி என்பதே வள்ளுவர் கூற்று.

'வாழ்க! வாழ விடுக!' என்ற வளமான நீதியை மக்கள் எல்லோரும் உள்ளத் தில் கொண்டு வாழ வேண் டும் என்பதே வள்ளுவரின் குரல். இத்தமிழ்ப் பெரியார் கூறிய செவ்விய வார்த்தை தனையே நாமும் சிந்தை தனில் கொண்டு வாழ்வை சிறப்படையச் செய்வோ மாக!

## தாய் மொழி

தாய் மொழியையும், அதி லுள்ள இலக்கியச் செல்வத்தையும் படியாமல் அசட்டை செய்து விட்டு, வேறொரு அன்னிய பாஷை யைப் படித்து அந்தப் பாஷையிலும் அதனுடைய பேச்சு வழக்கிலும் நிபுண ராக எண்ணி நமது இளைஞர் கள் எத்தனையோ ஆண்டு களை வீணாக்கி வருகிறார்கள். இப்படி வீணாக்கியும் தினசரி வாழ்க்கையில் எந்தப் பய னும் கிட்டுவதாய் இல்லை. இவ்வாறு இளைஞர்கள் தங் கள் சக்தியை விரயம் பண் ணுவது நாட்டுக்கு அளவிட முடியாத நஷ்டமாகும். இந்த நஷ்டத்தை யாராலே கணக்கிட்டுச் சொல்ல முடி யும்? —மகாத்மா காந்தி

## தீவின் தந்தை


(கு. சிவஞானசண்முகம், துனுக்காய்)

குமரர் வன்னியனார், மூதூர் முதல்வர் ஆகிய இவர்களின் மறைவு தமிழ் மக்களின் மனதை விட்டு அகல முன் மற்றும் ஓர் பேரிடியை எம் செவிமடுத்துக்கேட்க வேண்டி ஏற்பட்டது தமிழ் இனத்தின் துர்ப் பாக்கியமே ஆகும். இன் றைய தமிழினத்தின் கஷ் டகால நிலையிலும் தமிழ் இனத்திற் கென்று தயங் காது நெஞ்சுத் துணிவு டன் உழைத்த அரும் பெரும் தியாகி திரு. வி. ஏ. கந்தையா அவர்களை யும் தமிழினம் பறி கொ டுத்துவிட்டது. தமிழ் உரி மைக்குப் போராடிய காலத்திலே சத்தியாக் கிரக களத்திலே மூதூர் தந்த தளபதி ஏகாம்பரம் அவர்களைப் பறி கொடுத் தோம். இன்று எல்லாம் தமிழ் இயக்கம் வெற்றி கரமாக இயங்கி வரும் இந்நேரத்திலே ஏழு தீவு மக்களின் தந்தையையும் காலன் அழைத்துச் சென்றுவிட்டான்.

திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் உண்மையிலே யே ஓர் சமய, சமூகத்தொ ண்டன் ஆவார். இவர் தமிழ்இனத்திற்கும் தமிழ் மொழிக்கும் மட்டுமல்ல, சைவ சமயத்திற்காகவும் அரும் பெரும் சேவைக ளைச்செய்துள்ளார். தாய் மொழியில் எவ்வளவு பாசம் கொண்டு அதன் விடுதலைக்காகச் செயலா ற்றி வந்தாரோ அதே போல் சைவ சமயமும் தழைத்தோங்குவதற்கு அநேக சேவைகள் செய் துள்ளார். தமிழ் இனத் தின் விடுதலைக்காகப் பாராளுமன்றத்திலும் வெளி இடங்களிலும் எவ் வளவோ புத்திமதிமளை ஆட்சி பீடத்தினரிற்கும் பொது மக்களாகிய எமக் கும் புகட்டி வந்துள்ளார்.

சிரித்துச் சிரித்துப் பேசி எவரையும் தனது விருப் பத்திற்கு இணங்க வைக் கக் கூடிய தன்மை வாய்ந் தவர் இவர். இலங்கைப் பாராளுமன்றத்திலே துவேஷ மனப்பான்மை கொண்ட இந் நேரத்தி லேயும், சிங்கள மக்களின் தனி மதிப்பைப் பெற்றி ருந்தமையால் ஒரு பொ ழுது சபாநாயகராக இருந்து பாராளுமன்றக் கூட்டத்தை நடத்திய இவர் நீதிமான்; சமயத் தொண்டன்; தேசபக் தன்; தமிழ் அன்னையின் அருந்தவப் புதல்வன்; தீவின் தந்தை. இவரை இனி நாம் கண்களால் காணும் நாளும் எந் நாளோ! இவ்வளவு திற மையும் ஒருங்கே அமை யப் பெற்றவரை இழந்த நாம் அனலிடப்பட்ட புழுப்போல் துடிக்கின் றோம். இவர் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஈடு இணையில்லா நஷ்ட மாகும். இவரின் ஆத்மா சாந்தி அடைய வளர்மதி அங்கத்தவர்கள் ஆகிய நாம் கடவுளைப் பிரார்த் திப்போமாக! என்றும் ஓங்குக இவர் புகழ்!

## படம் தந்தோம்!



## பாடல் தாருங்கள்!

இந்தப் படத்தைக் கவனியுங் கள். இதைப் பார்த்ததும், உங் கள் இதயத்தில் எண்ணக் குவி யல்கள் பல தோன்றுகின்றன அல்லவா?

சரி-அவற்றைக் கவிதையாக வடியுங்கள். வளர்மதி, மே/பா சுதந்திரன், 194 ஏ, பண்டார நாயக்கா வீதி என்ற விலாசத் துக்கு அனுப்புங்கள்.

நல்ல கவிதைகள் இரண்டு எதிர்வரும் இதழ்களில் இடம் பெறும்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3723 செல்வி செல்வரதி சிவஞ்ஞானம், "தமிழகம்", சங்குவேலி வடக்கு, மானிப் பாய்.

3724 செல்வன் மாரி முத்து மாணிக்கம், சரவணை கிழக்கு, வேலணை.

3725 செல்வன் க. சிவகா ருண்ணியம், கரம்பன், ஊர் காவற்றுறை.

3726 செல்வன் வி. எஸ். மணியம், பூரடி தோட்டம், அக்கரைப்பத்தனை தபால்.

3727 செல்வன் க. ஞானம், சந்தி வெளி, முறக் கொட்டாஞ்சேனை.

3728 செல்வன் பூ. கணே சமூர்த்தி, ஆரையம்பதி, காத்தாங்குடி.

3729 செல்வன் சின்னத் தம்பி கனகசபை, துறை நீலாவணை, கல்முனை.

3730 செல்வி வ. பிரேமா வதி, 'முகவாசா', கோப் பாய் தெற்கு. கோப்பாய்.

3731 செல்வன் நா. யோகராசா, சக்தி நிகேதன், மல்லாகம்.

3732 செல்வன் செ. சற் குணராசா, கல்லடி உப் போடை, மட்டக்களப்பு.

3733 செல்வன் கே. எம். ஏ. அஸீஸ், சாஹிரா கல் லூரி, கம்பளை.

3734 செல்வி இ. பங்கயச் செல்வி, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

3735 செல்வன் ஞா. பவுல் அந்தோனி 44/1, வேலுவனு வீதி, தெமட்ட கொட, கொழும்பு-9.

3736 டி. எஸ். கோவிந்த ராஜா, பரிசுத்த திருத்துவக் கல்லூரி, காவயல் தோட் டம் கந்தப்பாளை தபால்.

3737 ஐ.எல்.எம். ஜாபிர், அரசினர் முஸ்லிம் வித்தியா லயம், பலாந்தை.

3738 எம். அழகு, கொத் மலை.

## வேலணை வாலிபர் சங்கத்தின் அனுதாபம்

வேலணை வாலிப முன்னேற்றச் சங்கத்தின் கொழும்புக் கிளையின் மாதாந்தக் கூட்டம் அதன் தலைவர் எ. அமிர்தலிங்கம் தலைமையில் சங்கப் பணிமனையில் சென்ற 16-6-63ல் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் சங்கத்தின் காப்பாளரின் ஒருவரும் ஊர்காவற்றுறைப்பிரதிநிதியுமான திரு. வே. அ. கந்தையா அவர்களின் மரணம் குறித்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. தலைவர் தனது உரையில் திரு. கந்தையா அவர்களின் தமிழ்த் தொண்டையும் சமூகப் பணியையும் பாராட்டிப் பேசி அவரின் மரணம் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக வேலணை வாழ் மக்களுக்கும் ஈடு செய்யமுடியாத இழப்பு எனக் கூறினர்.

அடுத்துப் பேசிய பொருளாளர் செ. நாகராசா, அன்னாரின் சேவையைக் கூறி நான்கு பிரேரணைகளைப் பிரேரித்தார். அந்த நான்கு பிரேரணைகளும் சங்கத்தின் அங்கத்தவர்களால் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது.

### பிரேரணைகள்

சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமான திரு. வே. அ. கந்தையாவின் மரணம் குறித்துக் கொழும்பில் விவேகானந்த மண்டபத்தில் ஓர் அனுதாபக் கூட்டம் ஒன்று நடத்துவது.

திரு. கந்தையா அவர்களின் மரணத்தால் ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஓர் அனுதாபச்செய்தி அனுப்புவது.

மேற்படி சங்கம் நடாத்த இருக்கும் அனுதாபக் கூட்டத்திற்குத் தமிழ்த் தலைவர்களையும், இதர அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைப்பது.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் இன்று பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் நிலவுவதால் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒரே ஒரு கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நல்ல முறையில் ஆராய்ந்து தொகுதி மக்களின் நலனுக்காகவும் கட்சியின் வளர்ச்சிக்காகவும் முழுநேர ஊழியராகத் தன்னை அர்ப்பணிக்கக் கூடிய ஒருவரைக் கட்சிவேட்பாளராகப் போட்டியிடத் தெரிவு செய்யும்படி கட்சியின் தலைவரைக் கேட்டுக்கொள்ள ஒரு தூதுக்குழுவை அனுப்புவது.

இன்னும் பலர் பேசிய பின் செயலாளர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

### மட்டக்களப்பில் பாரதி சிலை

மட்டக்களப்புச் சிறுவர் பூங்காவில் மிக விரைவில் பாரதி உருவச் சிலை நிறுவுவதற்கான ஏற்பாட்டைச் சிறுவர் கலைக் கழகம் துரிதமாகச் செய்து வருகிறது.

பிரபல இளம் சிற்பியான புல்லுமலை நல்லரெத்தினம் புதுவிதமான பாரதி சிலையை மட்டக்களப்புச் சிறுவர் கலைக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்ய முன் வந்துள்ளார்.

கழகப் போஷகர் திரு. மாஸ்டர் சிவலிங்கம் கொழும்புக்குச் சென்று சிலையைச் சிற்பியிடமிருந்து பெற்றுக் கொள்வார்.

மிகப் பிரமாதமாக நடைபெறவிருக்கும் பாரதி சிலை திறப்பு விழாவில் இளம் சிற்பிக்குப் பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பதற்கும் ஏற்பாடாகியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கழகச் செய்திகள்

## தமிழறிஞர் வரவுக்குத் தடையா?

### வள்ளுவர் விழாவில் மன்னர் பிரதிநிதி

சிறந்த பல சொற்பொழிவுகள், இசைக் கச்சேரி, வில்லுப் பாட்டு, நாடகம் ஆகிய பல நிகழ்ச்சிகளுடன் மன்னரிற் சிறப்புடன் கொண்டாடப்பட்ட வள்ளுவர் விழா 8ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மாணவர்களது ஊர்வலத்தோடு ஆரம்பமாயிற்று.

ஊர்வலத்தில் புனித சவேரியார் கல்லூரி, முஸ்லிம் மகா வித்தியாலயம், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகிய மூன்று பாடசாலை மாணவர்களும் பங்குபற்றினர். விழா நிகழ்ச்சிகள் யாவும் நல்லாயன் ஆண் பாடசாலையில் நடைபெற்றன. மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. அ. அழகக்கோன் தலைமை வகித்தார்.

தமிழ்த் தாய் வணக்கம் திரு. த. சிதம்பரநாதன் அவர்களால் பாடப்பட்டது.

அனைவரும் எதிர்பார்த்திருந்த பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் வரமுடியாதுள்ளதைத் தமது தலைமை உரையிற் தெரிவித்த திரு. அழகக்கோன், 'இவ்வித' விழாக்களிற்தானும் சிறந்த பேச்சாளர் ஒருவரை நாம் கண்டு மகிழ்வுறுதல் விசா மறுப்பு மூலம் எம் அரசாங்கத்தால் தடுக்கப்பட்டு வருமாயின் அதன் நோக்கம் தான் என்ன—அவ்வளவு உரிமைதானும் தமிழர்களது விஷயத்தில் மட்டும் மறுக்கப்பட்டு வருவதன் அந்தரங்கக்கொள்கை யாது?— என்ற கேள்விகளை எழுப்பினர்.

அடுத்து, "உள்ளத்தினை உயர்வு" என்னும் விஷயம் பற்றிய திரு. க. கந்தசாமியின் பேச்சில் பல தத்துவார்த்தக் கருத்துக்கள் எழுந்து உலவி, கேட்போரது உள்ளத்தையும் எழுந்துயர வைத்தன.

திருக்குறளின் சிறப்பையும் அந்நூல்தரும் உயர்ந்த கருத்தையும் தெளிவுற, பல உதாரணங்கள் மூலம், விளக்கினர் ஜனாப் என். எம். ஏ. கபூர்.

திருவள்ளுவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையை எடுத்தியம்பினர் விடத்தற்தீவு எம். பி. எம். முகம்மது காசிம் ஆலிம்சா அவர்கள்.

தமிழ் வளர வேண்டின் இவ்வித விழாக்களையும் நாம் கொண்டாட வேண்டும், அப்போதுதான் நாமும் வாழலாம், எங்கள் வருங்கால இனமும் வாழும் என செல்வன் எஸ். பெனடிக்ற் கூறினர்.

மன்னர் உதவித் தபாற் கந்தோர் அதிபர் திரு. இ. இராசரத்தினத்தின் இசைக் கச்சேரி ஒரு மணி நேரம் நடைபெற்றது.

சிரித்த வண்ணம் சிந்திக்கவும் வைப்பதாயிருந்தது, குழந்தையார் கோஷ்டியினர் வில்லுப் பாட்டு.

அதைத் தொடர்ந்து சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களின் "வழி காட்டிய ஒளி" என்ற நாடகத்தோடு திரு. த. சிதம்பரநாதன் நன்றி கூற, விழா சிறப்பாக நிறைவெய்தியது.

### சைவ சமயப் பரீட்சை முடிவு

கடந்த வருடம் விவேகானந்த சபை நடத்திய அகில இலங்கைச் சைவ சமயப் பரீட்சையில் பள்ளிக் குடியிருப்பு அரசினர் தமிழ்ப்பாடசாலை மாணவர் நூற்றுக்கு நூறு வீதமானோரும் சித்தியடைந்துள்ளனர். அதில் இருபத்தைந்து வீதமானோர் முதற் பிரிவில் தேறியுள்ளனர். இம்முடிவு கொட்டியாப்புரப்பற்றிலேயே முதல் தரமுடிவாகும். இக் கிராமப் பாடசாலை மூன்று ஆசிரியருடன் இயங்கிய போதும், எட்டு வகுப்புகளைக் கொண்டுள்ளபோதும் திறமையுடன் கருமம் ஆற்றி இப்படியான சிறந்த முடிவைப்பெற்றமை பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

### கிராம அதிகாரிக்கு பிரியாவிடை

குருக்கள் மடம், செட்டிபாளையம் கிராமங்களுக்கு கடந்த பதினைந்து ஆண்டுகள் கிராம அதிகாரியாகக் கடமைபுரிந்து இளைப்பாறிய கிராம அதிகாரி திரு. சா. இளையதம்பி அவர்களுக்கு குருக்கள் மடம் பொது மக்களால் ஒரு மகத்தான பிரியாவிடை குருக்கள் மடம் மெ. மி. பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திரு எஸ். ஈ. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் அளிக்கப்பட்டது.

குருக்கள் மடம் ஸ்ரீ செல்வக்கதிர்காம சுவாமி கோயிலடியிலிருந்து குருக்கள்மடம் பிரதான வீதி வழியாக முன்னை நாள் கிராம அதிகாரி அவர்களும் தற்போதய கிராம சேவையாளர் அவர்களும் மேள வாத்தியங்களுடன் பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பிரசித்த நொத்தாரிஸ் திரு. சா. கந்தப்பன், டாக்டர் செ. சீனித்தம்பி, திரு. கு. மாணிக்கவாசகர் ஆசிரியர் திரு. பெ. விஜயரெத்தினம் முதலியோரும் திரு. சா. இளையதம்பியின் சேவையைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். குருக்கள் மடம் மெ. மி. பாடசாலை மாணவிகள் இடையிடையே இன்னிசை விருந்தளித்தார்கள். முன்னைநாள் கிராமத் தலைவருக்கு பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது.

### திருவள்ளுவர் தினப் பேச்சுப் போட்டி

இருபாலை சைவ பரிபாலன சங்க கொழும்புக் கிளையின் ஆதரவில் 6-6-63 வியாழக் கிழமை மாலை 7 மணிக்கு கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் கோப்பாய் கிராமச் சங்க தலைவர் திரு. பொ. தி. சம்பந்தன் அவர்கள் தலைமையில் பேச்சுப் போட்டி ஒன்று நடைபெற்றது.

தலைவர் போட்டியை ஆரம்பித்து வைத்துப் பசுகையில் "இச் சங்கத்தினர் இது போன்ற சமய விழாக்களை நடாத்த நாம் அனைவரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டு'மென்றும் போட்டியில் பங்கு பற்றியவர்களைப் பாராட்டியும் பேசினர். மத்தியஸ்தர்களாக ஆசிரியர் திரு. க. இரத்தினம், ஆசிரியர் திரு. சி. கதிரவேலு, ஆசிரியை திருமதி நாகம்மா, தெய்வேந்திரன் ஆகியோர் கடமையாற்றினர். போட்டியின் முடிவுகள் பின் வருமாறு:—

கீழ்ப் பிரிவு:—

1. செல்வி சு. சற்குணராணி, 2. செல்வன் பொ. சண்முகராசா, 3. செல்வன் தெ. ஸ்ரீதரன்.

மத்திய பிரிவு:—

1. செல்வி சி. பகவதி, 2. செல்வன் க. ரவீந்திரகுமாரன், 3. செல்வி தி. மீனலோசனி.

மேற்பிரிவு:—

1. செல்வி க. பத்மாசனி தேவி, 2. செல்வன் தி. ஜெயகுமாரன், 3. செல்வி. சி. தையல்நாயகி.

பரிசில்களை தலைவர் அவர்களே வழங்கினர்கள். முடிவில் தி. பொன்னம்பலநாதன் அனைவருக்கும் நன்றி நவின்றார்.

### இருபாலை சைவபரிபாலன சங்கம் தீர்மானம்

'தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமிழ் பேசும் இனத்தின் விடுதலை வேட்கைக்கு அர்ப்பணித்த ஓர் தியாக சீலரை தமிழ் சமுதாயம் பறிகொடுத்து விட்டது. அன்னர் ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவராய் விளங்கினர் என்பதிலும் பார்க்க ஓர் விடுதலை இயக்கத்தின் தளபதியாக இருந்தார் என்று கூறுவது மிகையாகாது. விழியினும் மேலானமொழியுரிமை, குடியுரிமை இழந்து தவிக்கும் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டார். இவரது மறைவு சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் மாபெரும் இழப்பாகும். அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றென்றும் அழியாது சிரஞ்சீவியாக தமிழ் மக்களின் இதயக் கோவிலில் வாழ்வார் என்பது திண்ணம். அவரது மறைவால் வாடும் அன்னாரது மனைவி மக்களுக்கும் கொழும்பு வாழ் இருபாலை மக்கள் சார்பாக எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.'

இவ்வாறு இருபாலை சைவ பரிபாலன சங்க கொழும்புக் கிளை ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

### புதுப் பாடசாலைக் கல் நாட்டு விழா

பாலையடித்தோணைக் கிராமத்தில் புதிய பாடசாலைக்குக் கல் நாட்டு விழா (5-6-63) புதன்கிழமை காலை 7-30 மணியளவில் அதி விமரிசையாக நடைபெற்றது.

கட்டிட நிருவாக உதவி ஆணையாளர் திரு. வ. சுப்பிரமணியம் சம்பிரதாய முறைப்படி அடிக்கல்லை நாட்டினர்.

விழாவுக்குப் பாலையடித்தோணைப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு. க. செல்லப்பிள்ளை தலைமை தாங்கினர். விழாவில் பாலையடித்தோணைக் கிராமத்தின் கிராமச் சங்க உறுப்பினர் உட்பட மற்றும் பலரும் பேசினர். இறுதியில் தேநீர், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

கல்குடாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. மாணிக்கவாசகரின் அயரா உழைப்பின் பயனாகவும், கிராம மக்களின் வேண்டுகோளின் பேரிலுமே இப்பாடசாலை இங்கு நிறுவப்படுகிறதென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடசாலைக் கட்டிட வேலையை சந்திவெளி ப. நோ. கூ. சங்கம் கொந்தராத்து எடுத்துள்ளது என்பது தெரிந்ததே.

## அமரரின் தியாகம் சொல்லும் தரமன்று

### மறைந்த தலைவருக்கு திரு. ஜெயக்கொடி அஞ்சலி

"பட்டதாரியும், சிறந்த வழக்கறிஞராயும் விளங்கிய அமரர் கந்தையா அவர்கள் ஓர் சிறந்த தமிழரசுவாதியாகவும் திகழ்ந்தார். தன் சுகபோகங்களைத் துறந்து, தம் மக்களுக்காக உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து கல்லும், கரடும் முள்ளும் நிரம்பிய கஷ்ட பாதையை ஏற்றுக்கொண்டார். அதன் பயனாக தன் அருமை மனைவியையும், அன்பு மக்களையும், தவிக்கவிட்டு விண்ணுலகு எய்திவிட்டார். அவர் காட்டிப்போன பாதையைப் பின்பற்றி எம்மினத்தை விடுதலையடையச் செய்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெற உதவுவோமாக" இவ்வாறு உடுப்பிட்டி மாவட்டக் கிளைத் தலைவர் திரு. க. ஜெயக்கொடி அவர்கள் பூரணையன்று நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் திரு. கந்தையா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: அமரத்துவம் அடைந்த கந்தையா அவர்கள் பஞ்சணை மெத்தையில் படுப்பதை விட்டு பனுகொடை தடுப்புக் காவல் முகாமிலும், மறியற் சாலையிலும் கல்லும் உமியும் நிரம்பிய உப்பவியல் சாப்பாட்டையும், உல்லாச வாழ்க்கையை விட்டு கஷ்ட வாழ்க்கையையும் வரவேற்றார். இவை எல்லாம் பட்டம் பதவிக்காகவல்ல, தமிழ் மக்களின் அடிமை விலங்கை அறுத்தெறிவதற்காகவே. இதற்காக அன்னர் செய்த தியாகங்கள் சொல்லுந்தரமன்று.

தன் அறிவாலும், அனுபவத்தாலும் தன் பகைவரையும் வசப்படுத்தி வெற்றியீட்டத்தக்க வல்லவர். அவரின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரு நட்டமாகும்.

## வெள்ளி 28ம் திகதி முதல்!



கெயிட்டி மற்றும் 5 திரைகளில்

ராஜசுலோசனு, எல். விஜயலட்சுமி, சி. கே. சரஸ்வதி, மனோரமா, ஜி. முத்துக்கிருஷ்ணன், வி. கே. ராமசாமி

நடித்த

# பொன்னி திருநாள்

பாடல்கள்:
தஞ்சை ராமையாதாஸ்—மருதகாசி

இசையமைப்பு:
கே. வி. மகாதேவன்

பின்னணி பாடியவர்கள்:
சீர்காழி கோவிந்தராஜன்—ஸ்ரீநிவாஸ்—சுசீலா—ராகவன்
ஜமுனாராணி—ராதா ஜெயலக்ஷ்மி

## 5வது வெற்றி வாரம்!

செல்லமஹால் மற்றும் 8 திரைகளில்!

ஜெமினி கணேசன்—அஞ்சலிதேவி
எம். ஆர். ராதா—பி. கண்ணும்பா—எஸ். ராமராவ்
கமலகுமாரி

நடித்த

# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

## 15வதும்; கடைசி வாரமும்!

கெயிட்டி திரையில்

ஜெமினி கணேசன்—சாவித்திரி—சந்திரபாபு—எம். ஆர். ராதா
விஜயகுமாரி—அசோகன்—ராஜம்மா—எஸ். வி. சுப்பையா

நடித்த

# பாத காணிக்கை

எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்—தேவிகா நடிக்கும்

# பலே பாண்டியா

## 2வது வெற்றி வாரம்!

பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)



என். டி. ராமராவ்
பி. சரோஜாதேவி
வி. நாகையா,
காந்தாராவ்
மற்றும் பலர்
நடித்த

# சீதாராம கல்யாணம்

## 9வது வாரம்!

கிங்ஸ்லி
(கொழும்பு)

ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (அம்பாறை)

பார்த்தோர் பரவசப் படுகிறார்கள்
பார்க்காதோர் இன்றே பாருங்கள்!

★ சிவாஜி கணேசன்
★ பி. சரோஜாதேவி
★ எஸ். எஸ். ஆர்.
★ ஆர். விஜயகுமாரி
★ எம். ஆர். ராதா
★ பி. எஸ். வீரப்பா
மற்றும் பலர்
நடித்த



# ஆலயமணி

## 2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை).

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) லிபர்ட்டி (பதுளை) ஆனந்தா (கம்பளை) பிரீதி (ஹட்டன்)

ஆகிய திரைகளில்!

விசாலாட்சி பிலிம்சாரின்

# சுமைதாங்கி


(ஆயிரம் வாசல் இதயம்)

திரைக் கதை—வசனம்—டைரக்‌ஷன்
—ஸ்ரீதர்—

ஜெமினிகணேசன் (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) தேவிகா

முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி
முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூன் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.